SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

75-ம் புத்தகம் 16-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு சித்திரைமாசம் 27-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பாத்திமா மாதாவின் உலகயாத்திரை வரலாறு

(J. V.)

பாத்திமாமாதாவின் திருச்சுரூபத்தோடு இந்தியாவுக்குவந்தவண. தெமூத்தியேசுவாமியவர்கள் வெளிப்படுத்திய சிலவிபரங்கள் வருமாறு: இப்போது கன்னிகாஸ்திரியாயிருக்கும் லூசிக்கும், மற்றும் இரண்டு சிறுவர்களுக்கும்பாத்திமாவிலே தேவதாயார் காட்சியளித்தார். லூசியிடமிருந்துகிடைத்த விபரங்களைக்கொண்டுதான் இச்சுரூபம் செய்யப்பட்டுள்ளது. பாத்திமாவிலே மேற்றிராணியாரது உத்தரவின்படி ஓர்பேர்போன சிற்பி பலவருடங்களாக வேலைசெய்து இதனைமுடித்தார். இடையிடையே லூசியின் அபிப்பிராயத்தைக்கேட்டு அவள்கோரியபடியே இச்சுரூபத்தைச் செய்தார். உலகயாத்திரைக்கென நிர்மாணிக்கப்பெற்ற திருச்சுரூபம் இதுஒன்றுதான். 1939-ம் ஆண்டு இச்சுரூபவேலை ஆரம்பமாயிற்று. 1944-ம்ஆண்டுதான் சுரூபம் பூர்த்தியானது. இதிலிருந்து சுரூபம் எத்துணைபெருங்கவனமாகவும்,, நிதானமாகவும் செய்யப்பெற்றதென்பதை ஊகித்துக்கொள்ளலாம். பின்னர் இச்சுரூபத்தைப்போல் வேறு மூன்று சுரூபங்கள் செய்யப்பட்டன. அவைகள் மூன்றுநாடுகளிலே மூன்று தேவாலயங்களுக்கென்று (ஆஸ்திறேலியா, பெல்ஜியம், தென்னமெரிக்கா) 1947-ம்ஆண்டு கொண்டுபோகப்பட்டன.

பிறகு உலகயாத்திரையின் வரலாற்றைச் சுவாமியார் பின்வருமாறு விபரித்தார். "நான் 1943-ம்ஆண்டு ஓர்சிலுவையை ஏந்தியவனாய் பெல்ஜியத்திலிருந்து பாத்திமாவுக்குத் திருயாத்திரைசெய்தேன். பாத்திமாவிலிருந்து ஐரோப்பாவின் தலைநகரங்களுக்குத் திருயாத்திரிகர்களைக் கோஷ்டிகளாக அனுப்பவேணுமென்று ஸ்ரீமதி மரியதெரேசா (இவர் இப்போது உலகயாத்திரிகர் கோஷ்டியின் தலைவராகச் சுரூபத்தோடு வந்திருக்கிறார்) ஆசித்தார். பிரான்சியரின் ஆதிக்கத்திலிருக்கும் ஜேர்மனிக்கு ஓர் திருயாத்திரைக்கோஷ்டியை அனுப்புகிறது நல்லதென்று பிரான்சியஸ்தானபதி எனக்கு எழுதினார். அங்ஙனம் மூன்றுவெவ்வேறுபேர்களிடம் தனித்தனியேஉதித்த எண்ணத்தின்பலனே இந்த உலகயாத்திரையாகும். ஒல்லாந்துக்கே முதன்முதலாகப்போகத் தீர்மானம் பண்ணினோம். இதைப்பற்றி நாங்கள் லூசியைக்கண்டு அவளின்யோசனையைக் கேட்டோம். இதைஅவள் ஆதரித்தது மட்டுமன்றி இது ஓர்உலகயாத்திரையாகவேண்டுமென்றும் தெரிவித்தாள். அவள்அபிப்பிராயப்படி செய்யப்பட்டசுரூபமான ஒன்றையே இதற்காக உபயோகப்படுத்சவேண்டுமென்றும் லூசி கேட்டிருந்தாள். அங்ஙனமே மேற்றிராணியாரின் உத்தரவுபெற்று 1947-ம்ஆண்டு வைகாசிமாசம் 13-ந்திகதி பாத்திமாவிலிருந்து சுற்றுப்பிரயாணம் ஆரம்பமாயிற்று. இதுவரை நாங்கள் போர்த்துக்கால், பிரான்ஸ், பெல்ஜியம், ஒல்லாந்து, லுக்சம்பேர்க். அங்கோலா, (ஆபிரிக்காவிலுள்ள போர்த்துக்கேயகுடியேற்றநாடு) மொறொக்கோ, மொசம்பிக், தென்னாபிரிக்கா, தென்மேற்காபிரிக்கா, சான்சிபார், தங்கனைக்கா, கெனியா, உகண்டா, றொடேஷியா, எத்தியோப்பியா, எறிற்றியா, எகிப்து, திரிப்பொலித்தானியா எனும் நாடுகளில் சுற்றுப்பிரயாணங்கள் நடத்தி இந்தியாவுக்குவந்துசேரலானோம்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான், இலங்கை, இந்தோசீனா, சீனா, யப்பான், பிலிப்பைன்ஸ், இந்தொனேசியா, ஆஸ்திறேலியா, அமெரிக்கநாடுகளைச் சந்தித்தபின் ஐரோப்பாவுக்குத் திரும்பவுஞ்சென்று இங்கிலாந்தையும், மற்றுஞ்சிலநாடுகளையும் சந்திப்போம். ருஷியாவுக்குஞ் செல்லவேண்டுமென ஆசிக்கிறோம். இச்சுற்றுப்பிரயாணம் எப்போது முடியுமென்று திட்டமாய்ச்சொல்லமுடியாது. எஸ்கிமோசாதிகளின் மத்தியிலும் நாங்கள் செல்வோம். றோமாபுரி சென்றதும் உலகயாத்திரை முடிந்துவிடும்.

நாங்கள்சென்றவிடமெல்லாம் சகலசாதி சனங்களாலும் உற்சாகமாகவும், இருதயபூர்வமாகவும் வரவேற்கப்பெற்றோம். ஒவ்வொருநாட்டிலும் ஆசாரம், நாகரீகம் வேறுபட்டிருப்பதற்கேற்ப வரவேற்பும் வெவ்வேறுவிதமாய் இருந்தது. ஆபிரிக்கநாடுகளில் வரவேற்பளித்தவர்கள் முஸ்லீம்கள். முஸ்லீம்களின் தலைவரே ஓர்பொன்மாலையைச் சுரூபத்துக்கு அணிவித்தார். ஓர்வரவேற்புப் பத்திரிகையும் வாசித்தார். எத்தியோப்பிய சக்கரவர்த்தி அழகான ஓர் தங்கப்பதக்கம் அளித்தார். அதன் ஒருபக்கத்தில் சக்கரவர்த்தியின் உருவமும், மறுபக்கத்தில் அவர் சேர்ந்த பிரிவினைச்சபையின் நாமமும் செதுக்கப்பெற்றிருந்தன. எல்லா அரசாங்கங்களும் சுற்றுப்பிரயாணத்திற்குச் சகல சகாயங்களும் அளித்துள்ளன. இச்சுற்றுப்பிரயாணத்தின் இலட்சியம் ஒன்றேயாகும். அதாவது ஆத்மீகலட்சியம், அல்லது சமாதானத்திற்காக வேண்டுதல்."

சுவாமியார் சிலகேள்விகளுக்குப் பதிலளிக்கையில் சுற்றுப்பிரயாணங்களிலே பலஅற்புதங்கள்நடந்தேறியதாகவும், பலகம்யூனிஸ்தர்களும் மனந்திரும்பி நல்வழியைத் தழுவினதாகவும் தெரிவித்தனர்.

---

—16-ம்நூற்றாண்டில் வசித்திருந்த உகோன் தக்கயாமாஎனும்பிரபு கத்தோலிக்கசமயத்தைத் தழுவியகாரணமாக வேதசாட்சியாயினார். இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிக்க யப்பானிய கத்தோலிக்கர் முயற்சித்து வருகின்றனர். இவர் தமதுவிசுவாசத்திலே தளராதிருக்கப் புத்திகூறி அப்போதிருந்த ஐந்தாவது சிக்ஸ்துஸ்பாப்பானவர் 1590-ம் ஆண்டு இவருக்கு எழுதிய திருமுகம்ஒன்றும் கண்டெடுக்கப்படலாயிற்று.

—டெயூஸ்ரோ நகரிலுள்ள ஸ்பானிய சர்வகலாசாலையின் வாயில்காப்போனாக 41 வருடம் சேவைசெய்து 1929-ம்ஆண்டு மரணமான ஓர்யேசுசபைச்சந்நியாசியாரான பிரான்சிஸ்கோ காறேற் பிறதருக்கு விரைவிலே முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டப்படலாம்எனச செய்திகிடைத்திருக்கிறது.

—இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்கதாய்மார்ஒவ்வொருவரும் மூன்று பென்ஸ்வீதம் கொடுத்துவரும்பணங்கொண்டு பாப்பரசருக்கு இப்பரிசுத்தவருடத்திலே வெள்ளிகொண்டு விசித்திரவேலைப்பாடுடையதாய்ச்செய்த நற்கருணைப்பாத்திரம்ஒன்று சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

---

## பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(அரு. 16: 16—22)

அக்காலத்தில்யேசுநாதர் தம்முடையசீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இன்னுங் கொஞ்சக்காலம்; இதன்பின் நீங்கள்என்னைக் காணமாட்டீர்கள்; மீண்டும்கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காண்பீர்கள். ஏனென்றால் நான்பிதாவிடம் போகிறேன்என்றார். ஆதலால் அவருடைய சீஷர்களிற் சிலர் கொஞ்சக்காலம், அதன் பின்என்னைக்காணமாட்டீர்கள். மீண்டும்கொஞ்சக்காலம், அதன் பின் என்னைக்காண்பீர்கள். ஏனெனில் பிதாவிடம்போகிறேனென்று நமக்குச் சொல்லுகிறாரே' அதென்ன? என்று ஒருவரோடு ஒருவர் சொல்லிக்கொண்டார்கள். இன்னும் கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? இவர்வசனிக்கிறது ஏதுஎன்று விளங்கவில்லையே என்றார்கள். யேசுநாதரோ அவர்கள் தம்மை வினவவிரும்புகிறார்களென்று அறிந்து அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: கொஞ்சக்காலம், அதன் பின்என்னைக்காணமாட்டீர்கள்; பின்னும்கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காண்பீர்கள்என்று நான்சொன்னதினால் அதைக்குறித்து உங்களுக்குள்ளே கேள்விகேட்கிறீர்களே. மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்: நீங்கள் பிரலாபித்து அழுவீர்கள். உலகமோ சந்தோஷப்படும். ஆனால், நீங்கள் துக்கப்படுவீர்கள். ஆயினும் உங்கள்துக்கம் சந்தோஷமாக மாறும். ஸ்திரீயானவள் பிரசவிக்கையில் தன் காலம் வந்திருக்கிறதினாலே துயரப்படுகிறாள். பிள்ளையைப்பெற்றபின்போவெனில் ஓர்மனிதன் உலகத்திற்பிறந்ததினால் சந்தோஷமுடையவளாய், இனிப் பிரசவவேதனையை நினையாள். அப்படியே நீங்களும் இப்போது துயரமுள்ளவர்களாய்இருக்கிறீர்கள். ஆனால் மறுபடியும் உங்களைக்காண்பேன். அப்போது உங்கள்இருதயம் சந்தோஷிக்கும். மேலும் உங்கள்சந்தோஷத்தை உங்களிடத்திநின்று ஒருவனும்பறியான் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாஜ் மஹால் நகரில் பாத்திமா மாதா

உலகப் பிரசித்திபெற்ற தாஜ் மகால் என்ற அழகியகட்டடம் இருக்கும் நகராகிய ஆக்ருவிலே திக்விஜயம் செய்தபோது பாத்திமா மாதாவின் சுரூபம் மிகுந்தகுதூகலத்துடன் வரவேற்கப்பட்டது. சுரூபம் றெயில்வே ஸ்ரேஷனைச்சேர்ந்தபோது கிறீஸ்துவர்களைவிடப் பன்மடங்கு அதிகதொகையினராக இந்துக்களும் முஸ்லீம்களும் குழுமியிருந்தார்கள். புறமதஸ்தர்கள் நமது அன்னையைப்பார்க்க எத்துணை ஆவல்கொண்டிருந்தனரெனில், ஸ்ரேஷன் பிளாட்பாரத்திலிருந்து சுரூபத்தை வெளியேகொண்டுவருவது மெத்தவுங் கஷ்டமாயிருந்தது. இறுதியில் குருமார் சுரூபத்தைச்சுற்றிநின்று சனக்கூட்டத்தைச் சமாளிக்கத் தொடங்கியபிறகே சுரூபத்தை வெளியே கொண்டுவரக் கூடுமாயிருந்தது. "ஆக்ருவிலே இவ்வளவு அமைதியுடனும், பயபக்தியுடனும்கூடியிருந்த இத்துணை பெரியசனக்கூட்டத்தை நாங்கள் இதுவரை பார்த்ததேயில்லை" என்று புறமதஸ்தர்கள் ஒருவாய்ப்படக் கூறினார்கள்.

### கம்யூனிஸமும் யேசுசபையாரும்

கம்யூனிஸத்தை எதிர்த்துக் கத்தோலிக்க திருச்சபைநடத்திவரும் போராட்டத்திலே அதிகம்ஊக்கமாக ஈடுபட்டிருக்கும் யேசுசபைக்குருமார் அதனை எதிர்த்துநடத்தும்போரில் ஓர் பகுதியாக இத்தாலிதேச ஆலயங்களிலுள்ள விலைபெற்ற சித்திரக்கலைப் பொருட்களைவிற்று அவற்றாற்கிடைக்கும் வருமானத்தை ஏழைகளுக்கும், பிழைப்பற்றிருப்பாருக்கும் உதவிசெய்வதிலே உபயோகிக்குமாறு பரிசுத்த பாப்பரசரின் அங்கீகாரத்தைப்பெற முயற்சித்து வருகின்றனர். வடஇத்தாலியிலுள்ள மொன்சாநகர் ஆசனக்கோவிலிலே சித்திரக்கலைப்பொருட்கள் தொகையாயிருக்கின்றன. அதிகமாகச் சித்திரவேலைப்பாடமைந்த இவைகள் ரியோடலின்டா அரசியால் உபகரிக்கப்பட்டன.

### ஏழாம் நூற்றண்டு

பரிசுத்த தேவதாயாரிடமிருந்து அர்ச். சைமன் ஸ்ரொக் என்பவர் கார்மேலஉத்தரியத்தைப்பெற்றுக்கொண்ட ஏழாம் நூற்றாண்டுவிழாவின் சர்வதேச கொண்டாட்டம் வருகிற ஆவணிமாதத்திலே ரோமாபுரியில்பிரஸ்தாபமாக நடந்தேறவிருக்கிறது. இதிலே கலந்துகொள்ளும்படியாக இங்கிலாந்திலிருந்து அம்மாசத்தில் ரோமாபுரிக்கு நடைபெறவிருக்கும் கார்மேலித்ததிருயாத்திரையில் இரண்டாயிரம் பேர்பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### சீனவும் கம்யூனிஸமும்

"சீனதேசத்திலே கம்யூனிஸ்தர்களைக் காட்டிலும் அதிகமான கத்தோலிக்கர் இருக்கிறார்களென நான் நம்புகிறேன்" என அங்கு மேய்னூத் மிஷனைச்சேர்ந்த வண. பி. ஓகொனர் சுவாமியார் சமீபத்திலே அயர்லாந்துதேச டபிளின் நகர் சேர்ந்தபோது தம்மைக் கண்டு பேசியவர்களிடம் அறிவித்திருக்கின்றார். சீனாவின் அரசியல்–இராணுவ ஆதிகத்தைக் கம்யூனிஸ்தர் கொண்டிருந்தபோதிலும், சீனமுழுவதும் நடைமுறையிலே கம்யூனிஸ்தாயிருக்கிறதென்று எண்ணுவது பெருந்தப்பிதமாகும். சீனாவிலே கம்யூனிஸ்தகட்சியில் சேர்ந்துள்ளவர்களின் தொகையை நிச்சயமாக எவருமே அறியமாட்டார்கள். அத்தொகை 40 லட்சமாய் இருந்தாலுங்கூட அது சீனாவின் முழுக்குடிசனத்தொகையிலும் நூற்றுக்கு ஒன்று வீதமாகவேயிருக்கும்" என்றும் சுவாமியார் தெரிவித்திருக்கின்றார்.

### "சமாதான குண்டூசி"

ஓர் சமாதான மாடப்புறவுடனும், பாப்பரசரது சின்னங்களுடனும்கூடியதான ஓர் தங்கக்குருசைக்காண்பிக்கும் ஓர் சமாதான 'பின்' அதாவது குண்டூசி ஓர் டேனிஷ் கத்தோலிக்கரால் நிர்மாணிக்கப்பெற்று வத்திக்கானால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனை நிர்மாணித்தவர் சென்றவருடம் ரோமாபுரியில் தங்கிநின்றபோது அவருக்கு இத்தனண்ணம் உதயமாயிற்று. ஆயிரக்கணக்கான கத்தோலிக்கரும், ஏனைய சமயங்களைச் சேர்ந்தவர்கள் தானும் ஏலவே இதனை அணியத்தொடங்கிவிட்டார்கள்.

## உபசரணைவிழா

### நெடுந்தீவு

மரதன் அஞ்சலோட்டக் கவிதைப் போட்டியில் இரண்டாவதுபரிசில்பெற்றவராகிய பண்டிதர் திரு. க. த. ஞானப்பிரகாசம் அவர்களின் தாய்நாடாகிய இப்பதியில 20-4-50 வியாழனன்று அவருக்கு ஓர்விசேஷ உபசரணைக் கொண்டாட்டம் மாவிலித்துறைப்பாடசாலையில் அதிசிறப்பாக நடந்தேறியது.

மாவிலித்துறைமுகத்திலே தலைவர் V. J. சின்னையா அவர்கள் மாலைசூட்டிப் பண்டிதர் அவர்களை வரவேற்றதும் அங்குகுழுமின பெருந்திரளான இனசனர், சிநேகிதர்புடைசூழ்ந்து அழைத்துச்சென்று அவர் பாரியார்சமேதராய் அவரை இதற்கெனச் சித்தஞ்செய்யப்பெற்றிருந்த பாடசாலையின் உயராசனத்தில் அமரச்செய்தனர்.. தலைவர், கிராமச்சங்க அக்கிராசனர் திரு. V.S. ஜேம்ஸ், திருவாளர்கள் N. ஐயம்பிள்ளை, M. J. சின்னத்துரை, K. சுவாமிநாதன், புங்குடுதீவுப்பிரசங்கியார் திரு. கதிரவேலு, செல்வன் கே. இராசையாமுதலியோர் பண்டிதரின் பாவன்மை, நாவன்மையைப் பாராட்டிச் சொற்பொழிவுகள் ஆற்றினர். பின்னர் சகலருக்கும் உபசரணைவிருந்து நடாத்தப்பட்டது.

சபையாரின்கேள்விப்படி பரிசில் பெற்ற பாக்களிற்சில பண்டிதர் அவர்களின்பாரியாரால் பண்ணோடு பாடப்பட்டது. பண்டிதர் அவற்றைவியாக்கியானஞ்செய்து இத்தஉபசரணை 'தமக்கல்ல, தாய்நாட்டில் தமிழுணனக்குச் செய்யப்பட்ட சிறப்பு' எனக்கூறித் தமது அன்பையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டார். தலைவரது நன்றியுரையுடன் கூட்டம் பூர்த்தியாயது.

—நிருபர்

## பிரியாவிடைவைபவம்

புங்குடுதீவுக் கத்தோலிக்க ஐக்கிய வாலிபசங்க அங்கத்தவர்கள் தங்கள் கோயில் கட்டளைக்குரவராயிருந்த வண. ஜி. லோர்சன்சுவாமியவர்கட்கு நிகழும் சித்திரைமாதம் 11-ந்திகதிபிற்பகல் 4-30 மணியளவில் ஓர்பிரியாவிடை அளித்தார்கள். சங்கத்தலைவர் திரு. எஸ். போல் இராஜேந்திரம் அவர்கள் பூமாலைசூட்ட, உபதலைவர் திரு. ம. அம்புறோஸ்அவர்கள் பிரியாவிடைப்பத்திரம் வாசித்தளித்தபின் சுவாமியவர்கள் அங்கத்தவர்களைத் தமதுபொன்மொழிகளால் மகிழச்செய்தார். அதன்பின் பிரதிமைப்படம் மடுக்கப்பட்டது.

காரியதரிசி

—கல்கத்தாநகரிலே தலைகாட்டிய கலறாஎனப்படும் விஷபேதியாலே சென்ற 15-ந்திகதியோடு முடிந்தஒருவாரத்தில் 272 பேர் மடிந்திருக்கிறார்கள். இந்தநோய் அங்கு சென்ற தைமாசம் 26-ந்திகதி தலைகாட்டியதுமுதல் 3,134 பேருக்குக்கண்டு இவர்களில் 1,180 பேர் இறந்துபோயிருக்கிறார்கள்.

## துன்பத்தில் இன்பம்

### ஓர் ஆத்துமத்துக்கும் காவற்சம்மனசுக்குமிடையே சல்லாபம்

### அதிகாரம் I

**ஆத்துமம்:** எனதுநேச காவற்சம்மனசே! இராப்பகலாய் என்னோடு இணைபிரியாதிருந்து என்னைப்பாதுகாத்துவரும் மோட்சதூதனே! என் ஆத்துமத்தின் உருக்கமானநேசரே! இதோநான் நோயும்பாயுமாய்க்கிடந்து வருந்துகிறேன். எனதுஉபத்திரவம்எல்லாம் உமக்கு நன்றாய்த்தெரியுமே. எத்தனையோபேர் சுகத்தோடும், பலத்தோடும் உல்லாசமாய் நடமாடித்திரியும்போது நான் துன்பதுயரத்தால் பிடிக்கப்பட்டுக் கிடப்பதென்ன?

**காவற்சம்மனசு:** என்நேசஆத்துமமே! என்னசொல்லுகிறாய்? எத்தனையோபேர் சுகமாய்ப் பலமாய்ச் சீவிக்கும் இந்தநேரத்தில் நீ சுகவீனமாய்ப் பலவீனமாய்க்கிடந்து துன்பப்படுவது உண்மையே. ஆனால் உலகத்தில் இப்போதுதானே எத்தனையோ ஆயிரம்பேர் உன்உபத்திரவங்களிலும் பார்க்க மகாகடினமான, மகாபயங்கரமான, மகாநீடியஉபத்திரவங்களைப்பட்டனுபவிக்கிறார்களே. அவைகளோடு நீ படுந்துன்பத்தை இணைவைத்துப் பார்த்தால் மலைக்கும்அணுவுக்குமுள்ள பேதம் தோன்றுமே. அத்தனை ஆயிரமாயிரம்பேருக்கு அவ்வளவு கடினவாதை நேரிடவிட்டதேவன் உனக்கு அதிலும் எவ்வளவோ குறைவான துன்பத்தை வரவிட்டிருக்கிறாரே. இதைநினைத்து நீ தேவனுக்கு நன்றியறிந்திருக்கவேண்டும்அல்லவோ! ஆறுதல் அடையவேண்டும்அல்லவோ!

**ஆத்து:** ஆம்! உலகத்தில்அநேகர் என்னிலும்அதிகம்கடின வியாதி,உபத்திரவங்களுக்குள்ளாகி வருந்துகிறார்கள்என்பது மெய். ஆனால், என் அன்பான காவற்சமனசே! உலகின் எட்டுத்திசையிலும் இந்தச்சமயத்திலே நோயாளிகளாய்க் கிடக்கும் எங்கள் எல்லோருக்குமஉள்ள நோய்உபாதைகள்எல்லாம் யாரால் வரவிடப்படுகின்றன, நீர் சொல்லியபிரகாரம் தேவனாற்தான் அவையெல்லாம் அனுப்பப்படுகின்றனவா?

**காவற்.:** என்நேசமான ஆத்துமமே! சந்தேகமின்றி இருந்த, இருக்கிற, இனிஇருக்கப்போகிற சகல நோயாளிகளுக்கும்உள்ள சகலநோய்கஸ்திதுன்பங்களும் தேவனாலேயே அனுப்பப்பட்டன, அனுப்பப்படுகின்றன, இனிமேலும் அனுப்பப்படும். பாவம்ஒன்றுநீங்கலாக இந்தஉலகத்தில் நடக்கிறசகலமும் தேவசித்தத்தினாலேயே நடக்கின்றன. அவருடைய சித்தமின்றி ஒன்றும் நடப்பதில்லை. அதாவது தேவகட்டளையாவது தேவவிடையாவதுஇன்றி ஒன்றும் சம்பவிப்பதில்லையே இல்லை. "தேவதிருவுளத்தாலன்றி உலகத்திலே யாதொன்றுஞ் சம்பவிப்பதில்லையென்பது நிச்சயம். அது விசுவாசசத்தியம்" என்றும், "சம்பவிக்கிற ஏதொன்றும் தேவதிருவுளத்தாலேயே சம்பவிக்கிறதென்று நாம் நிச்சயங்கொண்டிருக்கவேண்டும்" என்றும் அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் தெளிவாக வசனித்திருக்கிறார்.

பாவம் தேவசித்தத்துக்கு நேர்விரோதமானது. நெருப்பில்நின்று நீர்பிறந்தாலும் தேவசித்தத்திலிருந்து பாவம்விளையமாட்டாது. ஆயினும் பாவிகள் பாவத்தைச்செய்யாது தடுக்கப் பூரணவல்லபம் தேவனுக்குண்டாயிருந்தும் அவர்களுக்குத் தாம்அருளிய சுயாதீனத்தைப்பேணி அவர்கள் பாவம்செய்வதைத் தடுக்காதுவிட்டுவிடுகிறார்.

திவ்வியஇரட்சகரின் திருவாக்குப் [illegible]மாய் விடை [illegible] ஒருஅடைக்கலான் குருவிமுதலாய் நிலத்தில் விழமாட்டாது. தலையிலிருக்கும் தலைமயிரில் ஒன்றேஒன்று முதலாய்க் கீழ்விழமாட்டாது. அவரையறியாமல் அணுவும்அசையாது. அப்படியிருக்க என் கிறீஸ்தஆத்துமமே! தேவசித்தமின்றி நீயாவது, பூமியிலுள்ள மற்றெவராவது நோய்வாய்ப்பட்டிருக்கக் கூடுமா? நோயினால்வாதைப்படக்கூடுமா? தேவனின் விடையின்றி உங்களுக்கொன்றும் நேரிடாதாகில் நீங்கள் படும்பாடெல்லாம் அவரதுதிருவுளத்தினாலே உங்களுக்குவந்ததல்லவோ? அவருடையதிருவுளத்தினாலே நேரிடுவதெல்லாம் அவர்உங்களுக்கு அனுப்புவதல்லவோ?

**ஆத்து:** ஆனால், என் சுயமதியீனத்தினாலும், பாவநடக்கையாலும், எனக்குவரும் கஸ்திதுன்பங்களையும் தேவனே அனுப்புகிறாரோ?

**காவற்.:** உன்பாவநடக்கைக்கு உத்தரவாதிநீயே. உன்பாவநடக்கையினாலும், உன்மதியீனத்தினாலும் உன்மேல்விழுந்த துன்பதுயரங்கள் தேவதிருச்சித்தத்தினாலேயே உனக்கு நேரிடுகின்றன. அவர்தாமே அவைகளை உனக்கு அனுப்பியருளுகிறார்.

(தொடரும்)

## ருஷியா நடத்தும் போர்

ருஷியர் உலகத்தைக் கைப்பற்றுவதற்குள்ள உண்மையான போரைப் பொருளாதாரத் துறைகளிலும், பிரசாரங்கள் மூலமாயும் நடத்திவருவதாக மாஷல்திட்ட நிர்வாகியான திரு. போல். ஜி. ஹோப்பன்அவர்கள் கூறுகின்றார். மேலும்அவர் கூறியதாவது: "ஆயுதங்கள் உபயோகிக்கும் யுத்தமில்லாமலே சுதந்திரநாடுகளைக் கைப்பற்றிவிடமுடியுமென்று ருஷியசர்வாதிகாரிகள் நம்பிக்கைகொண்டிருக்கிறார்கள். இதுவரை உலகம்கண்டிராத மிகப்பிரமாண்டமான ஓர் இராட்சதப் போராட்டத்தின்நடுவில் நாம் சிக்கியுள்ளோமென்ற தெளிவான நிலைமையை நாம் உணரவேண்டும். ஒவ்வொருநாட்டிலும் பயிற்சிபெற்ற கம்யூனிஸ்தர்கள்பலர் இருக்கின்றனர். அவர்கள் பொருளாதாரத்துறையினாலும், பிரசாரத்தினாலும் பலன்கிடைக்கக்கூடிய எத்தகைய நடவடிக்கையிலும் இறங்குவதிலே பின்வாங்கமாட்டார்கள். பிரான்சில்மட்டும் கம்யூனிஸ்தர்கள் மாஷல்திட்டத்துக்கு விரோதமாகப் பிரசாரம்செய்தற்கென ஒருவருடத்தில் 1 கோடியே 50 லட்சம் டலர் செலவிட்டிருக்கின்றனர். நாம்எதிர்ப்பது ஒரு சாதாரணசண்டையல்ல. ஒருயுத்தத்தையே எதிர்த்து நாம்போராடிவருகிறோம். ஐரோப்பாவில் நடந்துவரும் ஆயுதங்களில்லாத இந்தயுத்தம் நமக்கு அனுகூலமாய்த் திரும்புகிறவரையிலே நாம் நமது அனுபவத்தையும், அறிவையும் கொண்டு மேலும் இந்தப்போராட்டங்களில் வெற்றியடைந்து முன்னேறவேண்டும்.

—அமெரிக்காவைத் தாக்குவதற்சென்று ஒருசணநேர அறிக்கையில் உலகத்திலேயே மிகப்பிரமாண்டமான ஓர்இராணுவத்தையும், விமானப்படையையும், நீர்மூழ்கிக்கப்பற்படையையும் அனுப்பிவைக்கச் சோவியற்ருஷியா இப்பொழுது அத்துணை பலமுள்ளதாய் இருக்கிறதென்று அமெரிக்க விமானப்பகுதிமந்திரியார் திரு. சிமிங்ரன் சென்ற 18-ந்திகதி சான்பிரான்சிஸ்கோநகரில்கூறி அமெரிக்கரை எச்சரித்திருக்கின்றார்.

—இங்கிலாந்திலே கத்தோலிக்க மேயர்களாகப் 18 பேர் இருந்துவருகின்றார்கள். இவர்களில் ஸ்திரீகளான மேயர்கள்இருவர். இப்பதினெட்டு மேயர்களையும் சமீபத்திலே வெஸ்றமினிஸ்றர் அதிமேற்றிராணியாரான கருதினால் கிறிவ்வின் ஆண்டவர் தமது அதிமேற்றிராசனமாளிகையில் வரவேற்று உபசரித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் நீதிமான்

(பண்டிதை: சிஸ்றர் மேரி எமறென்ஸியா அவர்கள்)

நமது தமிழ்மொழி சொல்வளம்மிகுந்தது. ஒரே பொருளை உணர்த்தும் பலசொற்கள் அடுக்கடுக்காக அமைந்திருக்கின்றன. நம்தமிழ் மொழியில், உதாரணமாக, சூரியன் என்பதற்கு ஆதவன், கதிரவன், பகலோன், வெய்யோன், ஞாயிறு, பரிதி, இரவி, தினகரன், அனலி, சோதி எனப் பலபெயர்கள் வழங்குகின்றன. இப்படி ஒரே பொருளை உணர்த்தும் பலசொற்கள் அமையப்பெற்றசிறப்பு நம் தமிழ்மொழிக்கே உரித்தானதன்றி ஏனையமொழிகள் இந்த அளவில்சிறப்பைக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஒரே பொருளை உணர்த்தும் பலசொற்கள் அமைந்த வண்ணமே இடத்துக்கு ஏற்றவாறு பல பொருளைப் பிறப்பிக்கும் சில சொற்களும் தமிழில்உண்டு.

நீதிஎன்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். அது இடத்துக்கு இயைந்தவாறு பலகருத்துகளைத் தெளியவைக்கும். உலகவழக்கில் நீதி என்றசொல் நியாயம்என்ற பொருளில் வழங்குகின்றது. நீதிபதி என்றால் இருதிறத்தார் வழக்குகளையும் கேட்டு நியாயம் வழங்குகிறவர் என்று சொல்லப்படுவார். நியாயம்வழங்கும்இடம் நீதிஸ்தலம் என்று சொல்லப்படுகின்றது. நீதிமான்என்று ஒருவர் புகழப்படுவரானால் நாம் அவரைக்குறித்து நினைப்பதென்ன? அவர் ஒருவருக்கும் அநியாயம் செய்யாமல் எல்லோரையும்ஒப்ப மதித்துச் சரிநீதிவழங்கும் சற்குணமுடையவர் என்பதாக எண்ணுவோம். உலகம்தழைக்க ஒழுக்கநூல் வகுத்தவராகிய வள்ளுவர் இதனை நடுவுநிலைமைக் குணம் எனக்குறிப்பிடுகிறார். நண்பர், அயலார், பகைவர் ஆகியோரிடம்கலந்துஊடாடும்போது வேறுபாடின்றி முத்திறத்தாரிடமும் ஒரே தன்மையாக நடந்துகொள்ளும் இயல்பை நடுவுநிலைமை என்கிறார். இதனையே உலகவழக்கில் நாம் நீதி அல்லது நியாயம்என்று சொல்கிறோம்.

'இவர் நீதிமான்'என வேதபுத்தகம் புகழ்வதும், திருச்சபை பரம்பரையாக நீதிமான் என்று பாராட்டுவதும், கத்தோலிக்க மக்கள் நீதிமான் எனக்கூறிக் கண்ணியப்படுத்துவதும்யாரை? உலகம்புரக்க உலகில்வந்து அவதரித்த தேவமனிதனான யேசு இரட்சகருக்கு வளர்ப்புக் கைத்தாதையாகப் பாக்கியம்பெற்ற புனிதன் சூசைஎன்பவரே வேதநூல் வியந்துபாராட்டும் நீதிமானாவார். நீதிமான் என்பதற்கு உலகவழக்கப்படி பொருள் கொண்டால் சூசைஎனப்படும் இந்த நீதிமான் யாருக்கு நீதி வழங்கினார்? அவர் தம்வாழ்க்கையில் தொடர்புபெற்றவர்கள் இரண்டே இரண்டு பேர்கள்தானே. ஒருவர் தேவமைந்தன் யேசுக்கிறீஸ்து. இன்னொருவர் அம்மைந்தனைப் பெற்றெடுத்த மாசணுகாமங்கை மரியம்மையார். சூசையின்சரிதையைத் துருவிஆராயினும் இந்த இருவரேஅன்றி வேறு எவரோடும் அவர் நெருங்கியதொடர்பும், மிகுந்தபேச்சும்,சாகசநட்புரிமையும் கொண்டதாகத் தெரியவில்லை. அவருடைய புறவாழ்க்கை தச்சுப்பட்டறையிலும், அவரது அகவாழ்க்கை நசரேத் சிறுமனையில் யேசுவுக்கும், மரியம்மைக்கும் ஆதரவுசெய்து அவர்களோடு பக்திவாழ்க்கை நடத்துவதிலும் கழிந்ததேயன்றி அவர் மற்றப்படி மக்கள் பலர்கூடிய மாபெரும் சமுதாயத்தைக் கண்டறியார். நடுக்கேட்டு நீதிவழங்கவேண்டிய எத்தகைய பாரந்தபொறுப்பும் இவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டதில்லை. அப்படியாயின் இவர் நீதிமான் என்று புகழப்படுவது எதுபற்றி? இதனை ஆராய்ந்து தெளிதலே இக்கட்டுரையின் கருத்தாகும். புனிதன்சூசை ஓர் ஒப்பற்ற நீதிமான் என்பதை இக்கட்டுரையின்மூலம் ஆராய்ந்து, அவ்வுத்தமன் கடைப்பிடித்த நீதியை நம்வாழ்க்கைச் செந்நெறிக்கு உதவிகொள்வது நம்கடனாகும்.

ஒழுக்கம்கூறவந்த நூல்கள் உலகில் பலவாயினும் பெரியஅறநூல்எனப் புகழ்வாய்ந்தது திருக்குறளே. அறத்தின்சாரமும் சத்தும்கொண்டு ஆக்கிய நூல் திருக்குறள். அறம்என்று வள்ளுவர்கருதுவது எதனை? 'அறஞ்செயவிரும்பு'என்ற ஆத்திசூடிப் பாடலுக்குத் தருமத்தைச்செய்ய விருப்பங்கொள்என்று அர்த்தம் கூறிக்கற்பித்தனர், நமது இளம் பள்ளி ஆசிரியர்கள். அந்தப் பருவத்தில் அறம்என்ற சொல்லுக்கு நாம் தருமம்என்று அர்த்தம்கொள்வது சரியென்று தோன்றியது. ஆனால், இப்போது ஆராய்ச்சிப் பண்போடு கூடிய நமதுபுத்திக்கு இந்தஅர்த்தம் சரியெனத்தோன்றாது.

அறநூல் எழுதிய வள்ளுவர் அறம் என்பதற்குக் கொண்ட பொருள் என்னை? பலநற்குணங்கள், பலதிறப்பட்ட ஒழுக்கங்கள் ஆகிய இவற்றின் தொகுப்பே அறம்என்று வள்ளுவர் கருதியதாகத் தெரிகின்றது. ஏனெனில்,அவர்தாம் தமது அறநூலில் அன்பு, அடக்கம், ஒழுக்கம், பொறை, ஈகை, தவம், வாய்மை, இன்னாசெய்யாமை ஆகிய இவை போன்ற இன்னும் பல நற்குணங்களை வாழ்க்கைக்கு இயைந்தவாறுவரிசைமுறையாக அதிகாரத்தொகுப்புடன் அடுக்கிவைத்துச் செய்துள்ள நூலே திருக்குறள். இதுவே அறநூல். இது அறநூல், என்பதை எண்பிக்க 'அறம் வலியுறுத்தல்' எனத் தனிஅதிகாரம் ஒன்றும் வகுத்து வாழ்க்கையில் அறம் இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகின்றார். மனதின்கண் மாசிலனாதலும், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல்ஆகிய இவற்றைத் தவிர்த்து நடப்பதுவும் அறம் என்கிறார். அறத்தால் வருகிற இன்பமே இன்பம், அறந்தவறிப் பாவத்தில் பெறுகிற இன்பமெல்லாம் இழுக்குடையதென்கிறார். இப்படியாக வள்ளுவர்வகுத்த அறநூலை ஆராய்கையில் அறமென்றசொல்லுக்குக் கிறீஸ்தவர்கள் வழங்கும் புண்ணியம் என்றசொல் பொருந்துவதாகத் தெரிகின்றது. பலதிறப்பட்ட நற்குணங்களையும், புனிதமான ஆத்துமபக்குவமும் கொண்டு கடவுளுடையவும் மனிதருடையவும் மதிப்புக்குப் பாத்திரமான ஒருவர் புண்ணியவான் என்று புகழப்படுதற்கு உரியவராகிறார்.

ஆகவே, புனிதன்சூசை ஓர் நீதிமான் என்றால், அவரிடத்தில் குறிப்பிடப்படும் நீதியானது நியாயம் என்ற பொருளையல்ல, ஆனால் அறம், புண்ணியம்என்ற பொருளையேஉணர்த்துகின்றது அவர் அறநெறி நடந்தவர், புண்ணியத்தில் பண்பட்டவர். எனவே, அவர் நீதிமான்.

(தொடரும்)

## அர்ச். அந்தோனியார் கோவில் பெரியகட்டு

—:—

பெரியகட்டு, அர்ச். அந்தோனியார் கோவில் வடஇலங்கை முழுவதிலும் பிரஸ்தாபமாக நன்கு அறியப்பட்டுள்ளது. தற்சமயம் இது அழிந்து பாழாகும் நிலைமையில் இருப்பதாலே, புதிய கோவில்ஒன்றைக் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. வருடந்தோறும் யாத்திரிகர்கள் அதிகரித்துக்கொண்டு வரும் இப்பதியிலே கொண்டாடப்பட்டுவரும் திருநாளின் இருபத்தைந்தாம் ஆண்டு யூபிலிவிழா இவ்வருடம் ஆவணிமாதம் வருகின்றது. அதனால் அர்ச். அந்தோனியாருக்கு மகிமையாக உசிதமான ஓர்சிறந்தகோவிலைக் கட்டியெழுப்ப எமக்கு உதவி செய்யுமாறு அர்ச். அந்தோனியாரின் பக்தர்களுக்கு மனுப் பண்ணுகின்றோம். பழையகோவில் யாத்திரிகர்களுக்கு ஓர் தங்கு மடமாய் இருந்துவரும்.

S. P. Alfred
Parish Priest, Vavuniya.

14-2-50

✠ J. A. Guyomar O. M. I.
Bishop of Jaffna.

## புறாவே பற!

"ஜெயம்"

1

புறாவே பற!
பூமுக மெங்கணும்
புத்துயி ரளித்திடப்
புறாவே பற

2

பொங்கும் சுயநல
போதை மேலிட்டுப்
பொய், களவு, கொலை, கள்
குருநிந்தை ஐந்தால்
பூலோகம் பாழ்பட்ட
பொழுதினில் ஜோதி
பூத்தது தாயாரின்
புதுமையைக்கூறி (புறா)

3

பாத்திமா தலத்தினில்
பாலரைக் கண்டாள்
பாவிகள் உய்ந்திடப்
பதைபதைத் திட்டாள்
புத்திர சோகத்தால்
புண்பட்ட தாயார்
புவிதேடி வருகின்ற
புதுச்செய்தி கூறி (புறா)

4

வஞ்சகம் சூதுகள்
வாது கொலை வாதை
வளர்கின்ற பூமியில்
வாழ வழிகண்டோம்
அஞ்சல்! இனிமக்காள்
அன்னை வருகின்றாள்
அநியாயம் அழிவுறும்
அருஞ்செய்தி கூறி (புறா)

5

விண்ணின் விடிவெள்ளி
வியனுல கரசி
விலையற்ற மாணிக்கம்
வேதத்தின் சிரசு
எண்ணற்ற பிரசாதம்
இறைக்கின்ற மேகம்
இங்கெழுந் தருள்கின்ற
இன் செய்திகூறி (புறா)

6

ஞானத்தின் பாத்திரம்
நம்பினோர் தஞ்சம்
நல்லாயனைத் தந்த
நல்லொளித் தங்கம்
ஈனரை ஈடேற்றும்
இரக்கத்தின் செல்வி
எம்மண்டை வருகின்ற
இன்செய்திகூறி (புறா)

7

மணிமாலை மலர்மாலை
மாமுத்து மாலை
மற்றெந்த மாலையும்
மாதா விரும்பாள்
செபமாலையே செல்வ
தாயாரின்மாலை
சேருங்கள் செபியுங்கள்
செபியுங்கள் என்றே (புறா)

8

நன்மை நிலைத்திட
நாஸ்திகம் மாய
நல்லார்மிக, நீதி
நாட்டில் செழிக்க
உண்மை நிலவிட
உயரப் பறந்திடு
ஓயாதபோர், பஞ்சம்
ஒழியப் பறந்திடு (புறா)

9

மாதாவின் இதயமே
மகிழப் பறந்திடு
மாசற்ற உலகமே
மலரப் பறந்திடு
ஆதாமின் சந்ததி
ஆளப் பறந்திடு
ஆண்டவன் கோபமே
அணையப் பறந்திடு (புறா)

10

வெள்ளைச் சிறகுகள்
விரித்துப் பறந்திடு
வேற்றுமை பொய்வாழ்வு
வெறுத்துப் பறந்திடு
சஞ்சலம் நோய்துன்பம்
சகித்துப் பறந்திடு
சத்திய வேதமே
தழைக்கப் பறந்திடு (புறா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத்துறை அர்ச். சூசையப்பரின் அடைக்கலத் திருநாள்

இத்திருநாள் வழமைப்பிரகாரம் கொழும்புத்துறைத்தாபனத்தில் அடுத்துநிகழும் வைகாசிமாதம் 7-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அதிபத்திச்சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்கு சமூகந்தரும்படி அர்ச். சூசையப்பர் பக்தர்களையும், கொழும்புத்துறை பழையமாணவர்களையும் அன்பாய் அழைக்கின்றோம்.

வைகாசிமாதம் 6-ந்திகதி சனிக்கிழமைமாலை 7-30 மணிக்கு மாலை ஆராதனை.

வைகாசிமாதம் 7-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்குப் பாடற்பூசையும், மாலை 4-30 மணிக்கு மாலை ஆராதனையும் அதனைத் தொடர்ந்து திருச்சுரூபசுற்றுப்பிரகாரமும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும் நடந்தேறும்.

தாபனத்தலைவர்

## திருநாள் அட்டவணை

**சித்திரைமாதம் 1950**

வெ 28 அர்ச். சிலுவைச்சின்னப்பர், கு.
சனி 29 அர்ச். வெரோ இராயப்பர், இ.
ஞா 30 கர்த்தர் உத்தானத்தின் பின்வரும் 3-ம் ஞாயிறு — அர்ச். கத்தரீனம்மாள், க.

**வைகாசிமாதம் 1950**

திங் 1 அர்ச். பிலிப்பும் சின்னயாகப்பரும், அ.
செவ் 2 அர்ச். அத்தனாசியார், மேவேதபா.
புத 3 அர்ச். சிலுவை கண்டெடுத்த திருநாள்
வியா 4 அர்ச். மோனிக்கம்மாள், வி.

சத்தியவேத
பாதுகாவலன்
1950-ம் ஆண்டு
சித்திரைமாதம் 27-ந் திகதி

## வணக்கமாசம்

பூலோகமாகிய இக்கண்ணீர்க் கணவாயிலே வாழ்கின்ற நாம் எல்லாம் எமது ஆபத்து அவசரங்களில் பரலோகத்தை ஏறெடுத்து, கிருபை தயாபத்துக்கு மாதாவாகிய எங்கள் இராக்கினியே, எங்கள் சீவமே, எங்கள் மதுரமே, எங்கள் தஞ்சமே யென்று அபயமிட்டு உதவிக்கு ஓடிப்போகின்ற மாதாவின் வணக்கமாசமாகிய வைகாசிமாதம் உதயமாகின்றது. சூரியனின் உதயத்தாலே தாமரைகள் மலர்வதுபோன்று, மாதாவின் வணக்கமாச உதயத்தாலே நமது இருதயகமலமும் மலரவேண்டியது. இவ்வசந்தகாலப் புஷ்பங்களைப்போல் நாமும் எமது இருதயங்களை மலரச்செய்து, இயற்கைப்புஷ்பங்களுடன் எமது இருதயபுஷ்பங்களையும் மாதாவின் பாதாரவிந்தங்களிலே சாத்தவேண்டியது. தமது வணக்கமாசத்திலே தேவதாயார் தம்முடைய பிள்ளைகளை விசேஷ கிருபைக்கண்கொண்டு நோக்குகின்றார். அன்று கல்வாரிமலையிலே தமது திருக்குமாரனின் சிலுவையடியில் தமது பிள்ளைகளாகப் பெற்றெடுத்த மனுமக்கள்மேல் அவர் விசேஷ கருணை கொள்ளுகின்றார். தமது மக்கள் தம்மை அதிகமாக நாடிவரும்போதும், தம்மைப் பாடித் துதிக்கும்போதும் அவர்கள் மேல் மிகுந்த அன்புகூருகின்றார்.

இதோ இன்றுமுதல் எல்லாத்தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதியெனப் புகழ்ந்து கொண்டாடுமென்ற அந்தத்திருவாக்கு நிறைவேறுவதைக்கண்டு ஆனந்திக்கின்றார். வண்டினங்கள் மதுவைவேண்டி நறுமலரை நாடிச் சரிவதுபோன்று தமது ஞானமக்களும் அனுக்கிரகங்களைவேண்டித் தம்முடைய பாதமலரைநாடிச் சரிவதைக் கண்ணுற்று அவர் உள்ளங்கனிந்து உவகையடைகின்றார். மாதாவின்மாசம் அவரதுபிள்ளைகளுக்கெல்லாம் ஓர் பாக்கியமான மாசம். அதனால் இந்தவணக்கமாசத்தை நாம்வழமைபோல அதிபத்திச்சிறப்பாய்க் கொண்டாடவேண்டும். அது ஆரம்பமாகி முடிகிறவரையிலே காலை மாலை கோவில்சென்று வணக்கமாசப்பத்தியை அனுசரிக்கவேண்டும். கோவிலுக்குச் செல்ல இயலாதிருப்பின் வீட்டிலேயே மாதாவின்சுரூபத்தை அல்லது படத்தைப் பிரசித்தமாக ஸ்தாபித்து, அதனைச்சிங்காரித்து, சுகந்த புஷ்பங்கள் சாத்தி, மெழுகுவர்த்திகள் ஏற்றி மாலைவேளை குடும்பத்தாரெல்லாம்ஒன்றுசேர்ந்து செபமாலை, பிரார்த்தனைமுதலாம் செபங்களாலும், திவ்வியகீதங்களாலும் மாதாவின் புகழைப்பாடி, அவரது உதவிசகாயங்களை இரந்து மன்றாடி வணக்கமாசப்பத்தியை அனுசரித்துவரவேண்டும். இவ்வாறெல்லாம் அவரது விசேஷ அன்பிற்கும், கருணைக்கும் எம்மை அருகராக்கி அவரிடம்எமக்கு வேண்டிய இகபரநன்மைகளை இரந்துகொள்ளவேண்டும்.

நிற்க, தமதுவணக்கமாதமாகிய வைகாசிமாதத்திலேயே பாத்திமாநாயகி இலங்கைக்கு வருகின்றார். அதனால் மாதாவின்வரவை முன்னிட்டு இம்முறைவணக்கமாசத்தை முன்னிலும் பன்மடங்கு பக்திப்பரவசமாகக் கொண்டாடி அவரின்வரவிற்குத் தக்க ஆயத்தஞ்செய்வோமாக! பாத்திமாபதியிலே தாயார் அந்தச் சிறுவர்களுக்குக்கூறிய மணிமொழிகள் நம்செவிகளிலும் மனதிலும் அதிகமாகத்தொனிக்கச்செய்வோமாக! செபமாலைமணி நமதுகரங்களிலே வழமையிலும் அதிகமாக உருண்டுகொண்டிருப்பதாக! தினமும் மாதாபேரால் சிலபத்திமுயற்சிகள்செய்து அவர்பாதங்களில் புண்ணியபுஷ்பங்களாகச் சாத்திவருவோமாக! திவ்வியபூசை தினமும் காண்பதும், திவ்விய நன்மை பெறுவதும், செபமும், தபமும், செபமாலையும், ஒறுத்தல்முயற்சிகளும், மனந்திரும்புதலும், பிறவும் மாதாஎம்மத்தியில் மகிழ்வுடன் எழுந்தருளப் பெரிதும் வாய்ப்பாயிருக்குமென்பதை உணர்ந்து இவற்றில் மிகுந்தகரிசனை எடுத்து வருவோமாக!

<u>நல்லூர் மீசாம்</u>

## முகமாலை வைகாசிப்பெருநாள்

முதற்பலன்:—சென்ற பெரிய சனிக்கிழமையன்று றோமாபுரியிலே வண. புறுனோ டானியேல் பிறதர் குருப்பட்டாபிஷேகம் செய்யப்பெறும் பாக்கியத்தைப்பெற்றனர். இவர் மல்லாகத்திலுள்ள புதுமைமாதாகோவிலைச்சேர்ந்தவர். இவர்தகப்பனார் மரித்தபொழுது, அவர் இந்தமீசாமின் தொண்டுகளிலே மிகுந்தகரிசனைகொண்டு தமதுபிரயாசையாலும், முன்மாதிரிகையினாலும் செய்த அருந்தொண்டைப் பெரிதும்பாராட்டி வண. ஞானப்பிரகாசர்சுவாமியார் எழுதியிருந்த கட்டுரையை ஞாபகத்திற் கொண்டிருக்கும் எவருக்கும் அவர்குடும்பத்தில் ஓர்குருவானவர் காலகதியில்உதித்தமை அதிசயமாய் இராது. இத்தகைய பத்திரசம்செறிந்த குடும்பங்களையும், அவ்விதகுடும்பங்களிலிருந்து குருவர்களையும் தேவன்ஏராளமாக எமது மேற்றிராசனத்துக்கு அளிப்பாராக.

தண்ணீர்ப்பஞ்சம்:—நெடுங்காலம் மழைபெய்யாததால் தண்ணீர்ப்பஞ்சம் எல்லோரையும் தாக்குகின்றது. முகமாலை அர்ச். பிலோமினம்மாள் கோவிலிலே பெருநாட்கடைசிஇரவில் யாத்திரிகர்கள் ஏராளமாகத் தங்கியிருக்கும்நேரத்தில் தண்ணீர்க்குறைவால் உண்டாகும்கஷ்டம் எவ்வளவு பெரிதென்பதைச் சென்றசிலவருடங்களாக அவதானித்துவந்தோம். இவ்வருடமும் அவர்கள்பாடு என்னவாகுமோவென்று அங்கலாய்ப்புற்றிருக்கும்போது, ஓர்உபகாரி ஓர்கிணறுவெட்டுவதற்கு உதவிசெய்ய முன்வந்ததையிட்டு மிகவும் சந்தோஷமுற்றோம். இவருக்கு அணையும்துணையுமாய்நின்று அங்குள்ள மற்றுஞ்சில வசதியீனங்களையும்நீக்கப் பிலோமினம்மாளின்பக்தர்கள் முன்வருவார்களென நம்பியிருக்கிறோம். அவற்றிலே அவசியமானவை, ஓர் சற்பிரசாத சிற்றாலயம்; பெருநாளுக்கென்றுவரும் யாத்திரிகர்கள் கடைசிவேஸ்பர்ப் பின்னேரத்தில்வந்து ஒன்றுசேருவது வழக்கம். உடனே தாயைக்கண்ட பிள்ளைகள்போல எல்லோரும் பிலோமினம்மாள்சுரூபத்தைப் புடைசூழ்ந்திருந்து மனமாரத் தங்கள்இக்கட்டிடைஞ்சலைச்சொல்லிச் செபிப்பார்கள். அந்தநேரத்தில் பாவசங்கீர்த்தனம் கேட்பதோ, திவ்வியசற்பிரசாதம் சந்திப்பதோ கஷ்டம். இதைக்கண்டு சென்றவருடம் சிலதற்காலிகமான ஒழுங்குகள்செய்தோம். ஓர்தகுந்த சிறந்த சிற்றாலயத்தைஅமைக்கப் பக்தர்கள் உதவிபுரிவார்களாக. அறைவீடு: சென்றவருடம் முகமாலைஅறைவீட்டில் நாம்இருக்கும்போது அங்கு குவிந்திருந்த மணலைக்கண்ட ஒருவர் "சுவாமி குளிர்மைக்காக மணலைக் குவித்துவைத்திருக்கிறாரோ" என்று மகிடியாகக் கேட்டார். அறைவீட்டின் வசதிக்குறைவினால் அங்குதங்கியிருக்கும்குருமார் வெகுகஷ்டப்படுகிறதைக்கண்டு சிலர் பழையதளவரிசைக்கல்லுகள்கொடுத்து உதவினார்கள். இவற்றைப்பதிக்க உதவிசெய்யப் போவது ஆர்?

அர்ச். பிலோமினம்மாள் பெருநாள்:—வழமையிலே வைகாசிமாசத்தில்கொண்டாடிவரும் பெருநாள் இம்முறை வைகாசிமாசம் 14-ந்திகதி கொண்டாடப்படும். நோவனைகள் செய்யவிரும்புவோர் காலநேரத்துடன் எமக்கு எழுதிஅறிவிப்பார்களாக.

சண்டிருப்பாய் அர்ச். சின்னத் தெரேசம்மாள் பெருநாள்:—சென்ற வருடம் கட்டிடவேலையின்நிமித்தம் இந்தக்கோவில்பெருநாள் கொண்டாட முடியாமல் போய்விட்டது. இவ்வருடம் வைகாசிமாதம் 21-ந்திகதி கொண்டாடப்படும். கட்டிடவேலையின்நிமித்தம் ஏராளமான கடனிருப்பதால் இப்பெருநாளோடு அர்ச். சின்னத் தெரேசம்மாளின் பக்தர்கள் கடனைத் தீர்க்க உதவிபுரிவார்களென்று நம்பியிருக்கிறோம்.

அர்ச். அந்தோனியார்கோவில் மானிப்பாய்:—சென்றதைமாதம் 24-ந்திகதி வண. ஞானப்பிரகாசர் சுவாமியார் ஞாபகதினத்தன்று அர்ச். அந்தோனியார்கோவில் கட்டிடநிதி ஆரம்பிக்கப்பட்டது நண்பர்களின் ஞாபகத்தில் இருக்கும். அநேகர் கட்டிடத்துக்கென்றும், வேறுஅநேகர் அர்ச். அந்தோனியார்பேரால் தருமத்துக்கென்றும் பணம்அனுப்பியிருந்தார்கள். தருமப்பணத்தைக்கொண்டு ஒரு ஏழைக்குடும்பத்துக்கு ஒருசிறியவீடு கட்டிக்கொடுத்தோம். பக்தர்ஒருவர் எழுதியதுபோல் "தமதுஏழைகளை நேசிப்பவர்களை அந்தோனியார் காப்பாற்றுகிறார்." ஒருவர் (G. Chrysostom) தமதுமகன் பரீட்சையிலே அரங்கேறியதற்காகத் தருமமும் அனுப்பித் தமதுகுடும்பத்துக்குக் கிடைத்த அநேகசகாயங்களுக்குநன்றியாக ஒரு பாடல்பூசை நிறைவேற்றிவைக்கும்படியும் கேட்டுள்ளார். இப்பூசை மாசத்தின் முதற்செவ்வாயன்று (வைகாசிமாசம் 2-ந்திகதி) அர்ச். அந்தோனியார் கோவிலில் நிறைவேறும்.

ஓடர் அனுப்புவது:
Sub-Post office,
NALLUR.

எனது விலாசம்:
Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

## "பாத்திமாமாதாவும் செபமாலையும்"

பாத்திமா செபமாலைமாதா இலங்கையைத் தரிசிக்கப் போகும் இச்சந்தர்ப்பத்திலே "பாத்திமாமாதாவும், செபமாலையும்" எனும் இவ்வரியபுத்தகத்தைக் கத்தோலிக்க தமிழ்மக்கள் ஒவ்வொருவரும், ஒவ்வோர் குடும்பத்தினரும்வைத்திருந்து, மாதாவின்வருகைக்கு ஆயத்தஞ் செய்துவரவேண்டும். பாத்திமா அற்புதங்களின்வரலாறு, செபமாலைத்தியானங்கள், மாதாவின் வாக்குத்தத்தங்கள், ஐந்து முதற்சனிக்கிழமைப்பத்தி அனுசரிக்கும்விதம், மாதாவின் மாசில்லாத இருதயத்துக்கு நிந்தைப்பரிகார நவநாள் ஆதியபலவும் இதிலேஅடங்கியுள்ளன. பார்வைக்கு அழகான புத்தகம்.

விலை பிரதி சதம் 25
தபாற்செலவு சதம் 10

பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T. A. J. மதுரநாயம்சுவாமியார்
மேற்றிராசனமாளிகை,
யாழ்ப்பாணம்.

## நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள், அர்ச். மாட்டீன் இவர்களின்மன்றாட்டால் யான் கேட்டுக்கொண்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். இவர்களின்நாமங்கள்புகழப்படுவதாக.

இ. மேரி லூர்தம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யாத்திரைக் கன்னிகை" பாத்திமா நாயகியின்
# யாழ்ப்பாண மேற்றிராசன விஜயம்



**மாதாவின் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!**

பாத்திமாவின் செய்திக்குச் செவிசாய்க்கின்றீர்களா?
பாத்திமாவின் செய்தியைப் பரப்புகின்றீர்களா?
பாத்திமாவின் செய்திப்பிரகாரம் சீவிக்கின்றீர்களா?
"பாத்திமா" என்னும் திருநாமத்தை என்றும் உங்கள் விருதுமொழி ஆக்கிவிட்டீர்களா?

### இவை உங்கள் ஞாபகத்தில் பதிவதாக!

### மாதா நம்மிடம்கேட்பது மிகசொற்பமே:

தபம், கடமைகளை நிறைவேற்றுதல்,
தினமும் செபமாலை சொல்லுதல்,
மாதாவின் மாசில்லாத இருதயப்பத்தியை அனுசரித்தல்,
ஐந்து முதற்சனிக்கிழமைகளில் மாதாவுக்கு நிந்தைப்பரிகாரஞ் செய்தல்.

### இவற்றிற்குப் பதிலாகத் தாம் செய்வதாக மாதா வாக்குப்பண்ணுவது:

தமது மாசில்லாதஇருதயம் வெற்றியடைதல்,
ருஷியா மனந்திரும்புதல்,
உலகசமாதானம் அருளுதல்.

**"பாத்திமா மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்."**

# சுற்றுப்பிரயாண ஒழுங்குமுறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அனுராதபுரம் | சேர்வது | ஆனி | 2 | பி. ப. | 5-00 |
| | புறப்படுவது | ,, | 3 | மு. ப. | 6-00 |
| முருங்கன் | சேர் .... | ஆனி | 3 | மு. ப. | 8-30 |
| | புறப் .... | ,, | 3 | பி. ப. | 4-00 |
| மன்னார் | சேர் .... | ,, | 3 | பி. ப. | 5-00 |
| | புறப்.... | ,, | 4 | பி. ப. | 5-00 |
| வவுனியா | சேர் .... | ,, | 4 | பி. ப. | 8-00 |
| | புறப்.... | ,, | 5 | மு. ப. | 7-00 |
| மாங்குளம் | சேர் .... | ,, | 5 | மு. ப. | 8-30 |
| | புறப்.... | ,, | 5 | மு. ப. | 10-00 |
| கிளிநொச்சி | சேர்..... | ,, | 5 | மு. ப. | 11-00 |
| | புறப்.... | ,, | 5 | பி. ப. | 2-00 |
| பளை | சேர்..... | ,, | 5 | பி. ப. | 2-30 |
| | புறப்.... | ,, | 5 | பி. ப. | 3-00 |
| மிருசுவில் | சேர் .... | ,, | 5 | பி. ப. | 3-15 |
| | புறப் .... | ,, | 5 | பி. ப. | 4-00 |
| வதிரி | சேர் .... | ,, | 5 | பி. ப. | 5-00 |
| | புறப்.... | ,, | 5 | பி. ப. | 6-00 |
| தும்பளை | சேர் .... | ,, | 5 | பி. ப. | 6-30 |
| | புறப்.... | ,, | 6 | மு. ப. | 7-00 |
| அச்சுவேலி | சேர் .... | ,, | 6 | மு. ப. | 8-00 |
| | புறப் .... | ,, | 6 | மு. ப. | 8-30 |
| தோலகட்டி | சேர் .... | ,, | 6 | மு. ப. | 9-00 |
| | புறப் .... | ,, | 6 | மு. ப. | 10-30 |
| மயிலிட்டி | சேர் .... | ,, | 6 | மு. ப. | 11-00 |
| | புறப் .... | ,, | 6 | பி. ப. | 2-00 |
| ஊறணி | சேர் .... | ,, | 6 | பி. ப. | 2-15 |
| | புறப் .... | ,, | 6 | பி. ப. | 3-00 |
| இளவாலை | சேர் .... | ,, | 6 | பி. ப. | 3-30 |
| | புறப் .... | ,, | 6 | பி. ப. | 4-30 |
| பாத்திமா | சேர் .... | ,, | 6 | பி. ப. | 5-00 |
| | புறப் .... | ,, | 7 | பி. ப. | 6-00 |
| மானிப்பாய் | சேர் .... | ,, | 7 | பி. ப. | 7-00 |
| | புறப் .... | ,, | 8 | பி. ப. | 3-30 |
| ஊர்காவற்றுறை | சேர் .... | ,, | 8 | பி. ப. | 4-30 |
| சின்னமடு | சேர் ... | ,, | 8 | பி. ப. | 6-00 |
| பண்ணைவழியாக | புறப் ... | ,, | 9 | பி. ப. | 4-00 |
| யாழ்ப்பாணமுற்றவெளி | சேர். | ,, | 9 | பி. ப. | 5-30 |
| ஆசனக்கோவில் | சேர் ... | ,, | 9 | பி. ப. | 6-30 |
| பாத்திமாமாதா பௌவ ஊர்வலம் | | | 10 | பி. ப. | 3-00 |
| | புறப்படுதல் | ஆனி | 13 | மு. ப. | 6-00 |

—தென்னிந்தியாவிலே கூடலூர் கத்தோலிக்க சேவாசங்கத்தின்முயற்சியால் இம்மாதம் 9-ந்திகதி இந்துக்களையும், கிறீஸ்தவர்களையும்அடக்கிய பெரியகூட்டமொன்று நடைபெற்றது. அதற்கு ஸ்ரீதெய்வசிகாமணி அருணசலம்தேசிகர்அவர்கள் தலைமைவகித்துப் பேசியவிடத்து: நாஸ்திகத்தை எதிர்த்துப் பிரசாரம்பண்ணுவதில் இந்துக்களும் கிறீஸ்தவர்களும் ஒத்துழைக்வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

—இந்தியாவிலே ஜப்பல்பூரிலிருந்து ஐந்துமைல்தூரத்திலுள்ள மதன்மகால் ஸ்டேஷனுக்கருகே முகலாயகாலத்துக் குளம்ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் அடிவரையிற்செல்லும் உடைந்த படிக்கட்டுகள் இன்னமும் காணப்படுகின்றன. தண்ணீர் ஐஸ்போல் சில்லென்றுள்ளது. செடிகள் அடர்ந்துவளர்ந்திருந்த ஓர்இடத்தைத் தோண்டியபோது இக்குளம் கண்டுபிடிக்கப்பட்டது.

—பிரித்தானியஅரசரின்பட்டத்துக் குமாரத்தியான எலிசபேத் இளவரசி சென்ற 21-ந்திகதி வெள்ளிக்கிழமை தமது 24-வது பிறந்தபெருநாளைக் கொண்டாடினார். தற்போது இளவரசி பிரித்தானிய கடற்படையில் உத்திபோகபதவிவகித்து மோல்தாதீவில் தங்கியிருக்கும் தமதுநாயகரான எடின்பரோபிரபுவுடன் சஞ்சரித்துவருகின்றார்.

---

### பிரசாதிபதியின் நம்பிக்கை

"ஒரு மூன்றாவதுஉலகயுத்தம் மூளுமென்று நான் நம்பவில்லை" என்பதாக அமெரிக்கபிரசாதிபதிட்றூமன் சென்ற 21-ந் திகதி போட்பென்னிங்நகரிலே அமெரிக்க இராணுவத் தலைவர்களின் கூட்டத்தில் தெரிவித்தனர். அவர் மேலும் பேசியதாவது: உலகத்திலே எங்களுடையஸ்தானம் தலைமைவகிக்கும் ஸ்தானமென்பதைக் கண்டுபிடிக்க இருயுத்தங்களையும், முப்பது வருட காலத்தையும் நாம் கடக்கவேண்டியிருந்தது. முதலாவது உலகயுத்தத்துக்குப்பிறகு நாம செய்தது போல் செய்து ஒரு மூன்றாவதுஉலகயுத்தத்தைக் கொண்டுவர நாம் விரும்பவில்லை. உலகசமாதானத்துக்காகவும், சேமாபிவிருத்திக்காகவும் இந்தத்தலைமையைப் பாதுகாத்துக்கொள்ள நாம் இப்பொழுது விரும்புகிறோம். ஒரு மூன்றாவது உலகயுத்தத்தை நாம் கொண்டுவரப்போகிறோமென்று நான் நினைக்கவில்லை. உலகத்தின் சித்தம் இறுதியில் தெளிந்துவிடுமென்று நான் நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நாட்டில் மழை பெய்கிறதா?

அலெக்சாந்தர் மாபெரும் வீரர். அவர்தந்தை ஆண்டுவந்த மசடோனியா இராச்சியம் அவரது ஆற்றலுக்கு மிகவும்அற்பமாகத் தோன்றிற்று. அகில உலகையும் தனிக்குடையிலே கட்டியாளவேண்டுமென்ற அவாவினால்தூண்டப்பட்டு அதற்கு ஆவனசெய்தார். திறமைக்கும் துணிவுக்கும் நிகரற்ற ஓர்பெரும்சைனியத்துடன் திக்விஜயஞ்செய்யக்கிளம்பினார். முதன்முதலாக அயல்நாடுகளை ஆக்கிரமிப்பதிலேயே முனைந்துநின்ற பார்சிக சக்கரவர்த்தியைப் புறங்கண்டு ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் பரவிக்கிடந்த அவனது சாம்பிராச்சியத்தை உடைத்துச் சின்னாபின்னமாக்கினார். ஆபிரிக்காக்கண்டத்தின் பாலைவனச்சோலையாகிய எகிப்துதேசத்தையும் கைப்பற்றித் தமதுவெற்றியின் விளக்கமாக அதன்சிறந்த துறைமுகப்பட்டணத்திற்கு அலெக்சாந்திரியாஎன்று தன்பெயரை நாமகரணஞ்செய்தார்.

இவ்விதவெற்றிப்பவனியிலேகாப்பிரியர்வசித்த ஓர்குக்கிராமம் எதிர்ப்பட்டது. அஃது நாம் இன்று நாகரீகம் என்று அழைக்கும்அநாகரீகம்எட்டாத புனிதஇடம். மக்கள் தம்உடல்உழைப்பால் தினசரிவாழ்க்கையை நடாத்திவந்தார்கள். யுத்தம், வெற்றி, தோல்வி என்னும் வெறியாட்டங்களை அவர்கள் கண்டும் கேட்டுமிராதவர்கள். உடல்வலியால் மாத்திரமன்றி அறிவிலும் தலைவனையே தலைவனாகக்கொண்டு கவலையற்றவாழ்க்கை நடத்திவந்தார்கள்.

வாட்டசாட்டமான தோற்றமும், எஃகுக்கவசமும் அணிந்த போர்வீரரைக்கண்ட சின்னஞ்சிறு பிள்ளைகள் எல்லாம் குய்யோஎன்று அடித்துப் புரண்டுகொண்டு ஓடிப் பக்கத்துவீடுகளில் சரண்புகுந்தார்கள். இந்தஅபயக்குரலைக் கேட்ட ஆடவர்கள் வெளியேவந்துபார்த்து அலெக்சாந்தரைக்கண்டார்கள். அவர்கேட்ட கேள்விகளுக்குப் பதில்சொல்லாமல் தங்கள் தலைவன்பால் அவரை அழைத்துச் சென்றார்கள்.

தலைவன் மிகமரியாதையுடன் அலெக்சாந்தரைவரவேற்று ஆசனம் அளித்தான். சணப்பொழுதில் ஏவலாட்கள் வெள்ளித்தட்டுகளில் தங்கரொட்டியும் தங்கப்பழங்களும் கொண்டுவந்து பரிமாறினார்கள். அலெக்சாந்தருக்குக் கோபமும் வியப்பும் உண்டாயின. ஆயினும் அவைகளை அடக்கிக்கொண்டு "இவ்வூரில் தங்கத்தைத்தான் சாப்பிடுகிறீர்களா?" என்றுகேட்டார்.

"இல்லை, ஆனால் தாங்கள் அதை விரும்பித்தான் வந்திருக்கவேண்டுமென யூகம்செய்தேன். உங்கள்நாட்டில் கோதுமை முதலிய உணவுப் பொருட்கள் நிச்சயம்இருக்கவேண்டும்; நாட்டையும், பெண்டீர் பிள்ளைகளையும்விட்டு உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய பலவிபத்துகளையும் பொருட்படுத்தாது இத்தனைதூரம் தாங்கள்வரவேண்டுமானால் வேறெதைத்தான் விரும்பி வந்திருக்கவேண்டும்?" என்று தலைவன் பதிலளித்தான்.

"அப்படி ஒன்றுமில்லை. தங்கள் குணாதிசயங்களை அறிந்துசெல்லவே வந்தேன்" என்று அலெக்சாந்தர் சாந்தமாகக்கூறினார்.

"குணாதிசயங்களை அறியவரும் கோலந்தான் கலங்கவைக்கிறது; எஃகுக்கவசம்அணிந்து முழு ஆயுதபாணியாக வந்திருக்கிறீர்கள்; பிள்ளைகுட்டிகளெல்லாம் எமனைக் கண்டதுபோலக் கிடுகிடுத்துநடுங்கி நாலாபக்கமும் ஓடி ஒளிகின்றனர்." இவ்வாறு வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது, முதியோர் இருவர் தலைவனின் குடிசைக்குள் நுழைந்தனர்.

அத்தலைவனே நீதிபதி. அவன் குடிசையே நீதிமன்றம். தங்கள் கஷ்டத்தை நீக்கவரும் வழக்காளிகள், எதிரிகளின் இரத்தத்தைஉறிஞ்சி ஓட்டாண்டியாக்கும் வழக்கறிஞர்கும்பல் அங்கில்லை; லஞ்சம்வாங்கிப் பொய்ச்சாட்சிசொல்லிப் பிழைக்கும் புல்லரும் அங்கில்லை. வழக்குகளைத் தவணையிடுவதும் அந்தக்கோட்டிலில்லை. தீர்ப்புக்கு அப்பீலும் இல்லை.

வழக்காளி: "ஐயா, நான் அதோ அவரிடமிருந்து ஓர்துண்டுநிலம் வாங்கினேன்; அதில் ஓர் கிணறு தோண்டினேன்; அப்பொழுது ஓர் பொற்குவியல் கிடைத்தது; நான் நிலத்திற்குத்தான் பணம் கொடுத்தேனேயொழிய, அந்தப்புதையலுக்குத் தம்படியும் கொடுக்கவில்லை; ஆகையால் அதுஅவருக்கேசொந்தம்; புதையலை எடுத்துக்கொள்ளும்படி எவ்வளவு சொல்லியும் அவர்மறுக்கிறார்; ஆகையால், தாங்கள் இந்தப்புதையலைஏற்றுக்கொள்ளுமாறு அவருக்குக் கட்டளையிடவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

எதிரி: "ஐயா, இந்த அநியாயமான பொருள் எனக்கு வேண்டவே வேண்டாம்; நான் என்நிலத்தை விற்றபோதே அதற்குரிய சகலஉரிமைகளையும் விற்றுவிட்டேன்; இந்தநிலத்தையும், இதிலுள்ள கமலைக்கோர்வை, சர்வசாதிவிருட்சம் முதலியயாவும் நீங்கள் சர்வசுதந்திரத்துடன் ஆண்டு அனுபவித்துக்கொள்ளவும்என்று கையொப்பமிட்டு உறுதி எழுதிக்கொடுத்தபின் அதிலுள்ளசெல்வத்திற்கு வாயைப் பிளப்பது சுத்தஅசட்டுத்தனம்; இந்த அநியாயத்திற்கு ஒருபோதும் நான் இணங்கவேமாட்டேன்; வழக்காளியைவிட நான்குறைந்தவனல்லன்; அவனுக்குஇருக்கும்மனச்சாட்சி எனக்கும் இருக்கிறது" என்று தன் வழக்கை எடுத்துக்கூறினான்.

தலைவன் அதிக சாக்கிரதையுடன் அவர்கள்கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்தபின் வழக்காளியைப்பார்த்து: "அப்பா, உனக்குக் குமாரன் இருக்கிறானா?" என்றான்.

"ஆம் ஐயா, ஒரேஒரு பயல் இருக்கிறான்; அவனும் உடனே புதையலை எதிரியிடம் கொடுத்துவிடுங்கள்என்று பிடிவாதம்பண்ணுகிறான்."

எதிரி, "உனக்குக் குமாரத்திகள் உண்டா?"

"ஆம் ஐயா, ஒரேஒரு பெண்தான் இருக்கிறாள். அவளும் அவர்களுக்குக் கிடைத்த புதையலுக்கு நாம் ஆசைப்படக்கூடாதென்று சாதனை செய்கிறாள்."

தலைவன் சற்றுயோசித்துவிட்டுப் "பெரியவரே, உமதுமகனை அவர் மகளுக்குக் கலியாணஞ்செய்துகொடுக்கவும்; அதன்பின் அந்தப்பொற்குவியலை தம்பதிகளுக்குப் பரிசாக அளித்துவிடுங்கள்" என்று தீர்ப்புக்கூறினான். இருபகுதியாரும் கைகுலுக்கி ஆனந்தித்தனர்.

இந்தவழக்கையும், தீர்ப்பையுங் கேட்ட அலெக்சாந்தருக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவர்கொண்ட வியப்பைக் கண்ணுற்ற தலைவன் "உங்கள்நாட்டில் இந்தவழக்கை எவ்வாறு தீர்ப்பீர்கள்?" என்றுகேட்டான்.

"இவ்விதவழக்கு கோட்டுக்குவரவேவராது; பணக்குவியல் கிடைத்திருந்தால் வழக்காளியும் எதிரியும் பெரும்பங்குக்காகச் சண்டையிட, பணம் பறிமுதலாகி அரசன் பொக்கிஷசாலையை நிரப்பும்; இவர்கள் அரசாங்கமுதலை அபகரித்தவர்கள்எனக் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையில் வைக்கப்படுவார்கள்" என்றார் அலெக்சாந்தர்.

இதைச் செவிமடுத்த தலைவன் விம்மிதங்கொண்டு "உங்கள்நாட்டில்மழை பெய்கிறதா? சூரியன் பிரகாசிக்கின்றானா?" என்றான்.

"அதற்கென்னசந்தேகம்; மழை காலந்தவறாமல் பெய்கிறது; சூரியனும் தன் சுடர்ஒளிபரப்புகிறான்."

"என்னவிந்தை! உங்கள்நாட்டில் ஆடுமாடுகள்உண்டா?"


"அவைகளெல்லாம் ஏராளம்; அதில் உங்களுக்கு என்னசந்தேகம் ஏற்பட்டுவிட்டது?"

"சந்தேகமில்லை, நிச்சயந்தான். கொடுங்கோலும், கொடுமையும் நடக்கும் உங்கள்நாட்டில் மழை எப்படிப் பெய்யக்கூடும்? ஆயினும் மாசற்ற பிராணிகளாகிய ஆடுமாடுகளுக்குப் போஷணையான புல் வளரவே தேவன் உங்கள்நாட்டுக்கும் மழையும் வெய்யிலும் அனுப்புகிறார்" என்றான் தலைவன்.

அலெக்சாந்தர் என்னவோ பதிலுரைக்க வாயெடுத்தார். அதே தருணத்தில் "தளதத்தா, தளதத்தா" என்ற இராணுவ சங்கநாதம் ஒலிக்கவே தனது பாசறைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

(ச. ஞா. தா.)




ஜோரான இந்தச் சிறுபையனை வெள்ளவத்தையைச் சேர்ந்த குழந்தை ஜே. எஸ். டப்ளியூ. இந்தப்படம் பிடிக்கும்போது அவனுடைய வயது 9 மாதங்கள் மாத்திரமே. அவனுடைய கம்பீரமான திடசரீரத்துக்குக் காரணப்பாடானது, ஓர் சிறு விஷயத்தில் அமைந்திருக்கிறது. அவனுடைய ஆகாரம்—

"லெக்டோஜன்"

இலங்கைக் குழந்தைகளின் ஆகாரம்

ஓர் நெஸில்ஸ் தயாரிப்பு


## பிரதிநிதியின் ஆலோசனை

பாராளுமன்றத்திலே சாவகச்சேரிப் பிரதிநிதியாகிய திரு. வி. குமாரசாமி அவர்கள் சென்ற 16-ந்திகதி நுணுவில் மேற்கிலே ஓர் சேவுநிலையத்தைத் திறந்துவைத்துப் பேசியபொழுது: யாழ்ப்பாணப் பெண்மணிகள் நேர்ஸ்மாராகவும், மருத்துவ மாதராகவும் தொழில்பார்க்க முன்வரவேண்டும்; இத்துறைகளிலேஉங்களுக்குச் சேவை செய்வதற்குச் சிங்களப்பெண்மணிகளை எதிர்பார்த்தல்கூடாதென அங்கு சமுகமாயிருந்த பெண்களைநோக்கிக் கூறலாயினர்.

## திருமணம்

### நாவாந்துறை

நாவாந்துறை வடக்குவாசரும், பிரபலகுத்தகைகாரனுமான திரு. பிலிப்பு செபஸ்தியாம்பிள்ளை இரத்தினம்அவர்களின் சிரேஷ்டபுத்திரன் திரு. அல்பிறெட் துரைசிங்கம் அவர்கட்கும், அவ்வூர் திரு. கிருத்தோ வயித்தியாம்பிள்ளை செல்வத்துரை அவர்களின் கனிஷ்டபுத்திரி திரு. அக்கினேஸ் புஷ்பம்மாவுக்கும் 19-4-50 புதன்கிழமை காலை 7 மணியளவில் அர்ச். பரலோகமாதாஆலயத்தில் வண. V. R. தார்சீசியஸ்சுவாமியவர்களால் மெய்விவாகத்திருச்சடங்கு நிறைவேறியது. பின்னர் சனசமூகநிலையத்தவர்களாலும் வேறுபலபெரியார் சிநேகிதர்களாலும் புதியதம்பதிகள் பூமாலைகள் சூட்டப்பெற்று நாதசுரவாத்தியங்கள் பல இசைக்க வீதியுலாப்போந்து அர்ச். நீக்கொலார்கோவில் சென்று அவ்வர்ச்சியசிஷ்டரின் ஆசியைஇரந்துகொண்டு மணமகன் இல்லஞ்சேர்ந்ததும் சம்பிரமமான உபசரணை நடைபெறலாயிற்று. பலர் வாழ்த்துச்செய்திகளும், வெகுமானங்களும் அனுப்பியிருந்தனர். புதுமணத்தம்பதிகள் அட்டஐஸ்வரியமும் பெற்றுவாழப் பரமன் அருள்பாலிப்பாராக.

—நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திமா நாயகிபால்

# தூதுசெல்லும் மாடப்புரு



[ தற்போது இந்தியாவின் பலவிடங்களிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகின்ற பாத்திமா செபமாலைநாயகியின் அற்புத திருச்சுரூபமானது, அடுத்துநிகழும் வைகாசிமாதம் 22-ந் திகதி இரத்மலானை விமானநிலையம் வந்துசேர்ந்து ஸ்ரீலங்காவில் தனது யாத்திரையைத் தொடக்கும். பாத்திமாமாதா லங்காவுக்கு விஜயஞ்செய்யவிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே யாழ்ப்பாணத்திலிருந்து மாடப்புருஒன்று அத்திருஅன்னையிடம் தூதுசெல்கின்றது ]

— கலிப்பா —

( முன்தொடர்ச்சி )

பாலை பழுத்திருக்கும் பால்போல் நிலவெறிக்கும்
சோலைக் கிளிதடுக்கும் சொர்ணமே நில்லாதே

புள்ளிமான் ஆடிவரும் புள்ளினங்கள் பாடிவரும்
துள்ளிப் பறந்து துரிதமாய்ச் செல்வாயே

கானிற் தரித்துநின்று காலோய எண்ணுமல்
வேனிலென்றும் பாராமல் வேகமாய்ப் போவாயே

வேடரிற்சிக் காது விழிப்பாய்ப் பறந்திடுவாய்
மாடப் புருவே மணிவா சகம்ஈதே

"ஆனந்தா" வேண்டுவரம் அத்தனையும் தாயார்க்கு
ஆனந்தமாய் உரைத்து அன்பாக மீளுவையே

பாத்திமா அன்னையென்று பாங்காய் அபயமிட்டேன்
ஏத்தினேன் தாயே எழுந்தருளி வாராயோ

ஒரேமுகமாய்த் தாயே உபயபதம் தேடுகின்றேன்
பராமுகமில் லாதுபரி பாலிக்க வாராயோ

கெட்டார் தழையாரோ கேடொருகால் நீங்காதோ
கெட்டுநொந்தேன் என்குறையைக் கேட்டருள வாராயோ

நானோ பெரும்பாவி 'தாயாக நானிருக்க
ஏனோ துய'ரென் றெனைத்தேற்ற வாராயோ

வருந்துகின்றேன் தாயே பவப்பிணியால் மைந்தன்
மருந்துண்டு நின்கரமே தந்தருள வாராயோ

சிலுவை யடியிலெனைச் சேயனுய்க் கண்டாய்நின்
சலுகை இரந்துநின்றேன் தற்காக்க வாராயோ

தவங்கிடந்து என்னைத் தனையனுய்ப் பெற்றுயே
பவங்கிடந்து மாளாமல் பார்த்தருள வாராயோ

பாவவழி விட்டேநின் பாரிசமாய் நான்திரும்ப
ஆவலுற்றுத் தாயே அழைக்கிறேன் வாராயோ

காமுகனுய்த் தீயோனுய்க் காலங் கழித்துவிட்டேன்
கோமகனை வேண்டிக் குறைபோக்க வாராயோ

மாயவலகைசெய்யும் வஞ்சனையில் சிக்காதுன்
தூயபதந் தேடத் துணைச்செய்ய வாராயோ

வாழ்உலகில் தேடியெனை வந்தாயேல் தாயேநான்
பாழ்நரகில் வீழாமல் பாதுசெய்ய வாராயோ

விண்மணிகள் பொன்முடியாய் மின்னுந் திருத்தாயே
கண்மணிபோல் என்னைநிதம் காத்தருள வாராயோ

நெஞ்சம் உருகிநொந்து நெட்டுயிர்த்து நின்பதமே
தஞ்சமென்று நம்பித் தவிக்கிறேன் வாராயோ

கடைவழிக்கு வாராதே காதற்ற ஊசிதன்னும்
கடைத்தேற யானும் கதியாக வாராயோ

உண்மை நெறிவிட் டுழலுகின்ற மக்களைநின்
தண்நிழலில் சேர்த்தென்றும் தாபரிக்க வேண்டுமம்மா

அஞ்ஞானம் நீங்க, அனைவர் உளத்திலுமே
மெஞ்ஞானம் ஓங்க, விரங்கிவர வேண்டுமம்மா

பொதுவுடமை காட்டுத்தீ போலப் பரவுதந்தோ!
எதுவிதமும் மக்களையே ஈடேற்ற வேண்டுமம்மா

நாஸ்திகமும் ஆங்காங்கு நாட்டில் பரக்குதந்தோ!
ஆஸ்திகராய்க் காத்துஎமை ஆதரிக்க வேண்டுமம்மா

சமதர்மப் பேய்தன் சமரொழிந்து நாட்டில்
சமாதானம் நீடத் தயைசெய்ய வேண்டுமம்மா

எட்டிக் கனிபோல் எமக்குச் செபதபமே;
கட்டிக் கரும்பாக்கிக் காணவைக்க வேண்டுமம்மா

காலையொடு மாலைதொறும் கையெடுத்துன் தூயசெப
மாலைசொல்லத் தாயே வகைசெய்ய வேண்டுமம்மா

தானதர்மஞ் செய்து தவித்தோர் நிழலாய்நாம்
ஆனகதிக் கச்சாரம் ஆக்கிவைக்க வேண்டுமம்மா

குரவோர் பெரியோரின் கொண்டதிரு ஆயர்தமின்
உரியமொழி கேட் டொழுகஅருள் வேண்டுமம்மா

செல்வச் சிறிலங்கா செம்பாதம் ஊன்றுமுன்னே
செல்வியே எம்வழியைச் சீர்ப்படுத்த வேண்டுமம்மா

ஈழத் தமிழ்நாடு எங்கள்திரு யாழ்நாடு
வாழஉனதாசி மழைபொழிய வேண்டுமம்மா

சரணமென்றுன் பத்தா சரணடைந்தோம் நல்ல
மரண மடைய வருள்புரிய வேண்டும்மா

யாசிந்தா லூசி யரிய பிரான்சீஸ்போல்
ஆசிதந்து எம்மையுமே ஆட்கொள்ள வேண்டுமம்மா

தாமரைப்பொற் தாள்நிலவும் தாயின் துணையுண்டு
சேமமாய்த் தூதுகொண்டு செல்லுவாய் என்புறவே

உந்தன் பதிலை உறக்கமின்றிக் காத்திருப்பேன்
சிந்தாத் திரையாகச் செல்!

சுபம்!

---

## பொதுவர்த்தமானம்

### சிகறெற்ருல் விளையுந்தீங்கு

சுகாதார நிபுணரான பேராசிரியர் எவ். ஏ. ஈ. குறு அவர்கள் சிகறெற் புகைப்பது சம்பந்தமாகக் கூறுவதுவருமாறு: "பென்ஸோ—பறைரினி" என்னும் ஒரு வஸ்து புகையிலையில் இருக்கிறது. அது மிகுந்த காரசத்துள்ளது. அதை வாய்அலம்புவதற்குத்தானும் நம்மால் உபயோகிக்கமுடியாது. உபயோகித்தால் வாய்வெந்துவிடும். ஆனால் தினமும் 20 சிகறெற்பாவிக்கும் ஒருவரதுவாயிலே ஒருவருடத்தில் 27 அவுன்ஸ் நிறையுள்ள இந்தவஸ்துச் செல்லுகிறது. புகைப்பதால் பசிதாகம் குறையும். ஆதலால் அது தேகத்தின் போஷணைசக்தியைப் பாதிக்கும். வயிற்றுப்புண்ணுள்ளவர்கள் புகைப்பதை விட்டுவிடவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை கூறப்படுகிறது. அப்பொழுது டக்றர் வயிற்றுப்புண்ணுக்குக்காரணம் புகைப்பதுதான் என்றும், அல்லது புகைப்பதால் வயிற்றுப் புண் ஆறுதுஎன்றும் கருதவேண்டும். விளையாட்டுநிபுணர்கள் புகைப்பதால் அவர்களது விளையாட்டுத்திறமை பாதிக்கப்படும். புகைப்பதால் நாடித்துடிப்பில் நிமிஷத்துக்குப் பத்துத் துடிப்புகள் அதிகரிக்கும். இருதயத் துடிப்பாலும் கோளாறுகளை உண்டு பண்ணும். புகைப்பதால் இரத்தக் கொதிப்பு உண்டாகிறது.

### யுத்தமா? சமாதானமா?

"ஓர்பெரியமகாயுத்தம் ஏற்பட்டால் அதில் வெற்றிபெறுவதற்குப் போதிய பலம்எவ்வளவோ, அவ்வளவையும் திரட்டி வைத்திருப்பதைக்கொண்டு மாத்திரம்தான் உலகில் யுத்தம்ஏற்படாது தடுக்கலாம்" என்று அமெரிக்க ஐக்கியதேச குடியாசுக்கட்சியின் வெளிநாட்டு நிபுணரான திரு. ஜோண் டல்ஸ் அவர்கள் எழுதியிருக்கும் "யுத்தமா? சமாதானமா? என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். தமதுபுத்தகத்தில் அவர் மேலும்எழுதியிருப்பதாவது: "தற்போது யுத்தம் தடுக்கப்பட்டால் எதிர்காலசந்ததியார் அதனை ஒருபெரிய ஆச்சரியமான காரியமென்று கருதுவார்கள். இது ஈடிணையற்ற ஒருவெற்றியாகும். நமது கடமையும் இதுதான். ஒருபெரிய யுத்தத்தை வெல்வதற்குத் தேவையான முயற்சி இதற்கும் தேவைப்படும். கம்யூனிஸத்துக்கு எதிரான சக்திகளைப் பலவீனப்படுத்துவதற்காக உலகம்இதற்குமுன் கண்டிராதவகையில் சோவியற் ருஷ்யா பெரிய பரிசோதனை நடத்திவருகிறது. இந்தஸ்தாபனம் உலகம் முழுவதிலும் வியாபித்திருக்கிறது. இந்த இரகசியசேனையில் ஈவிரக்கமற்றவர்களும், பழிபாவத்துக்கு அஞ்சாதவர்களும், நன்கு பயிற்றப்பட்டவர்களுமான பலர் எங்கும் எப்போதுமே வியாபித்திருக்கின்றார்கள்."

### அமெரிக்க இரத்ததானம்

யுத்தகால அமெரிக்க இராணுவ தலைவரும், அத்தேச வெளிநாட்டு மந்திரியு[illegible] ஜோர்ஜ் மாஷல் அவர்களே தற்போது அமெரிக்க செஞ்சிலுவைச்சங்க அக்கிராசனர் ஆவர். உயிர்ப்பிச்சை அளிக்கும் இரத்ததானதிட்டத்தைக் கொண்டுநடத்துவது இந்த ஸ்தாபனம்தான். அமெரிக்காவிலே தன்னிஷ்டமாக இரத்ததானம் செய்கிறார்கள். இதற்காக 30 நிலையங்கள் இருக்கின்றன. 1,600 ஆஸ்பத்திரிகளுக்குமேல் தானமாகக்கிடைத்த இரத்தத்தைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கானஉயிர்களை எமன்வாயிலிருந்து மீட்டுள்ளன. இரத்ததானம்ஏற்கும்திட்டம் 1948-ம் ஆண்டு தைமாதம் 12-ந் திகதி மீண்டும் தொடங்கியது. இதுவரை சுமார் 4,56,000 அமெரிக்கர் 5,13,000 பைந்து இரத்தம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு தடவையில் ஒருவர் உடலிலிருந்து ஒரு பைந்து இரத்தமே எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதற்கு 7 முதல் 15 நிமிஷங்கள் ஆகலாம். இரத்தநன்கொடை அருளுபவரின் ஆரோக்கியத்தை உத்தேசித்து, குறைந்தது எட்டுவாரகாலத்திற்கு அவரிடமிருந்து மறுபடி இரத்தம் எடுப்பதில்லை. ஒருவரிடமிருந்து ஒருவருடத்தில் ஐந்துதடவைகளுக்கு மேல் இரத்ததானம்பெறமாட்டார்கள்.

### போர்வீரரும் இரத்ததானமும்

1942-ம் ஆண்டு போர்வீரர்களுக்காக அமெரிக்க செஞ்சிலுவைச்சங்கம் இரத்தநன்கொடையைத்தேடிக்கொடுத்தது. பலஸ்தீன சண்டையின்போது அமெரிக்கசெஞ்சிலுவைச்சங்கம் கொடுத்தஇரத்ததானத்தைக்கொண்டு யூதர் அராபியர் ஆகிய இருபக்கத்துப் போர்வீரர்களுக்கும் உயிரூட்டினர்கள். பத்துவருடங்களுக்குமுன் இம்மாதிரி உயிர்ப்பிச்சை அளித்திருக்க முடியாது. பயங்கரஇரத்தசோகை பிடித்தகுழந்தைக்கு முற்றிலும் புதிய நல்லஇரத்தத்தைப்பாய்ச்சி உயிரூட்டுவது இப்போது சாத்தியமாகியிருக்கிறது. 75 வயதுள்ள முதியவருக்கு அடிவயிற்றில் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது இரத்தம் சேதமாவது நிச்சயம். ஆனால், இரண்டுநாட்களுள் அவர்தேகத்திற்குள் 12 பைந்து நல்லஇரத்தத்தைச் செலுத்திப் பிராணபத்தைத் தவிர்த்துவிடலாம். 12 பைந்து இரத்தம்தான் ஒருசராசரிமனிதனின் உடலில் ஓடிக்கொண்டிருப்பதாகும். இந்த இரத்ததான திட்டநுட்பங்களை அறியயப்பான், ஆஸ்திரேலியா, ஹலந்து முதலான பல்வேறுதேசங்களிலிருந்தும் செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் அமெரிக்காவிற்குச் சென்றிருக்கிறார்கள்.

---

—வழமைபோல இவ்வருடமும் பெரியவியாழனன்று பிரித்தானியஅரசர் லண்டன்நகரிலே வெஸ்றமினிஸ்றர் அபௌனும் புராதனஆலயத்தில் 55 வயோதிக ஆடவர்களுக்கும், 55 வயோதிகஸ்திரீகளுக்கும் தமதுகரங்களால் பணம்உபகரித்தார். இந்தநாணயங்கள் இதற்கெனவே புதிதாக அடிக்கப்பட்டிருந்தன. இந்தவைபவத்திற்கு எலிசபேத்அரசியும் சமூகமளித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### இலங்கைத் திருயாத்திரிகர்

கொழும்பு விக்கார்ஜெனறலான மிக வண. ஜி. போட்ரின் சுவாமியவர்களின் தலைமையிலே இலங்கையிலிருந்து போன பரிசுத்தவருட முதல்யாத்திரிகர்கள் 250 பேரும் சென்ற 18-ந் திகதியன்று இரவு ரோமாபுரிசேர்ந்துவிட்டார்களெனத் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இந்தயாத்திரிகர்களில்சிலாபவிக்கார்ஜெனறலான மொஞ். மிக்கேல் பெறேரா சுவாமியவர்கள் உட்படப் 12 குருப்பிரசாதிகள் இருப்பதாகவும், பரிசுத்த பாப்பரசர் அவர்களுக்குப் பேட்டியளிக்கவிருப்பதாகவும் அச்செய்தி தெரிவித்திருக்கின்றது.

### புதிய நீதியரசர்

தற்போது நீதிமந்திரியின் நிரந்தர காரியதரிசியாகவிருந்துகடமைபார்த்து வருகிறவரான திரு. வி. ரி. சென் கிளேயர் சுவான்அவர்கள் இலங்கைச் சுப்பிறீங்கோட்டு உபநீதியரசராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் அடுத்தவைகாசிமாதம் 1-ந் திகதியன்று தமது புதிய உத்தியோக பதவியைவகித்து நடத்தவிருக்கின்றார். இவருக்குவயசு 56. 1949-ம் ஆண்டு இவர் நீதிமந்திரியின் நிரந்தரகாரியதரிசியாக நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கு முன் அசைஸ் கம்மிஷனராகவும், கொழும்பு டிஸ்திறிக் நீதிபதியாகவும் உத்தியோகம் வகித்திருந்தார்.

### பெரிய நீர்ப்பாசன திட்டங்கள்.

வடமத்தியமாகாணத்திலேபடவீவாவிலும்; மகாகந்துருவாவிலும் இரு பெரிய நீர்ப்பாய்ச்சற் திட்டங்களைச் செய்துமுடிக்கும்வேலையிலே நீர்ப்பாசனபகுதி கையிடவிருக்கின்றது. இவ்விருதிட்டங்களும் பூர்த்தியடையுமிடத்துத் தற்போதுஅடர்ந்தகாடாய்க் கிடக்கும் சுமார் 70,000 ஏக்கர் நிலம் உணவுப்பொருட்செய்கைக்கு உள்ளாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விரண்டுக்குமாகப் பல லட்சக்கணக்கானரூபா செலவேற்படும்.

### மூன்றுபாஷைகளும் வேண்டும்

கமத்தொழில் மந்திரியார் திரு. டட்லி சேனநாயகஅவர்கள் சென்ற 13-ந்திகதி பரமேஸ்வாக்கல்லூரியிலே யாழ்ப்பாண ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச்சங்க வெள்ளிவிழா மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசிய போது: "இலங்கைமக்களின் எதிர்காலம் அவர்களின் தேசீயபாஷைகளாகிய தமிழ், சிங்களம் இரண்டினதும் அபிவிருத்தியிலேயே தங்கியிருக்கிறது; தாய்ப்பாஷையிலேயே கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்று கல்வி நிபுணர்கள்கூறுகின்றனர்; தமிழும், சிங்களமும் அந்நியர்ஆட்சியில் அலட்சியஞ் செய்யப்பட்டிருந்தன; இப்போது சுதந்திரஇலங்கையில் அவைகள் இரண்டும் அரசாங்கபாஷைகளாக இருக்கின்றன. ஆகவே, அதற்கேற்றவகையில் அவற்றின் கல்விக்கொள்கையும் உருவாகவேண்டும்; ஒருபாஷையே அரசாங்கபாஷையாவதில் எனக்கு நம்பிக்கையில்லை; இருபாஷைகளும் அந்தந்தப்பாஷை பேசப்படும்பகுதிகளில் அரசாங்க பாஷைகள் ஆவதையும் நான் ஆதரிக்கமுடியாது; ஆங்கிலமும் உலக பாஷையாக இருப்பதன் முக்கியத்துவத்தை உத்தேசித்து அதனை மூன்றுவதுபாஷையாகப் படிக்கவேண்டியது அவசியமாகும்" எனக் கூறலாயினர். அவ்வேளை சங்கத்தின் தமிழ்ஆராய்ச்சிக்கழக கட்டிடத்துக்கு மந்திரியார் அஸ்திவாரக்கல்லும் நாட்டினர்.

### அரசாங்க வயோதிகர்சாலை

அரசாங்க முதல்வயோதிகர்சாலைக்கெனக் கொக்கலையிலுள்ள றோயல் ஆகாயப்படைக் கட்டிடங்களை உபயோகிக்கவேண்டுமென்று தொழில்-சமூகசேவாமந்திரியார் திரு. எம். டி. பண்டா அவர்கள் கூறிய ஆலோசனையை அரசினர்ஒப்புக்கொண்டிருக்கின்றனர். 200 ஏக்கர் விஸ்தீரணமான கொக்கலை இத்தகையஓர்ஸ்தாபனத்துக்கு அதிகத் தகுதியானதென்று கருதப்படுகிறது. அது குழாய்த்தண்ணீர்வசதியையும் மின்சாரஉதவும்வசதியையும் சொந்தமாகக்கொண்டிருக்கிறது. ஆரம்பத்திலே கிழவர் கிழவிகளாக ஆயிரம் பேலரைவைத்துப் பராமரிக்கச் சமூக சேவாபகுதிஎண்ணுகின்றது. இது ஓர் மாதிரி ஸ்தாபனமாக நடத்தப்படும். ஆஸ்பத்திரிநோயாளரும், பாயும்படுக்கையுமானவிருத்தாப்பியர்களும் இதில் அனுமதிக்கப்படமாட்டார்கள். தங்களைவைத்துப் பராமரிக்க எவருமில்லாதவர்களும், சொந்தமாக வீடில்லாதவர்களுமான வயோதிகர்களே இதில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இவர்கள் தோட்டவேலை, கைப்பணி ஆகியனவற்றைப் பொழுதுபோக்காகச் செய்துவருவார்கள். இவர்களின் ஆத்மீகதேவைகளும் இதிலே கவனிக்கப்படும். இப்படியான தாபனங்களை அமைக்குமாறு யாழ்ப்பாணம், கல்முனை, பொத்துவில், பட்டிருப்பு, இரத்தினபுரிஆதியவிடங்களில் நிலங்கள் கொடுக்கப் பலரும் முன்வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

### நீர்கொழும்பு ஆஸ்பத்திரி

நீர்கொழும்பு அரசினர்ஆஸ்பத்திரியிலே நோயாளரைப் பராமரிப்பதற்கென்று நேர்ஸ்மாராகப் பயிற்சிபெற்ற சிலகன்னியாஸ்திரீமாரை நியமனஞ் செய்யவேண்டுமென்று கேட்டு நீர்கொழும்பு நகரசங்கத்தில் ஓர் பிரேரணை அரங்கேறியிருக்கிறது. சங்க அங்கத்தவர்களில் ஒருவரான திரு. ஜோண் எவ். குணரத்னஅவர்கள் இந்தப்பிரேரணையை எடுத்தாண்டு பேசிய போது: நீர்கொழும்பிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிக்கு நேர்ஸ்மாராகப்பயிற்சிபெற்ற கன்னியாஸ்திரீமார் அவசியந் தேவையென்றும், கொழும்பு அதிமேற்றிராணியாரின் உதவியைக் கொண்டு சிலகன்னியாஸ்திரீமாரையாவது ஆஸ்பத்திரிக்குப் பெற்றுத்தருமாறு சுகாதாரமந்திரியாரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும், உள்நாட்டில் பயிற்சிபெற்ற நேர்ஸ்மார் எவ்வளவுதான் திறமையுடையோராய் இருந்தபோதிலும் கன்னியாஸ்திரீமாரிடமுள்ள சிலகுணங்கள் அவர்களிடம் கிடையாவென்றும் கூறினர்.

---

### சனசமூகநிலைய வாசிகசாலைத் திறப்புவிழா

பேசாலை

நவீனமுறையிலே அமைக்கப்பட்ட இவ்வாசிகசாலை 22-4-50 சனிக்கிழமை பிற்பகல் ஐந்து மணியளவில் யாழ்ப்பாண உதவிஸ்தலதாபன அதிபர் D. இராஜேந்திராஅவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இவ்விழாவிற்கு மன்னார்மேற்குக் கிராமச்சங்க அக்கிராசனர் திரு. நீ. சந்தியா டயஸ் அவர்களும், சனசமூகநிலைய அக்கிராசனர் திரு. J. V. பல்டானு அவர்களும், மாஜி கிராமச்சங்க அக்கிராசனர் திரு. தொ. எலியாஸ் பீரிஸ்அவர்களும் தலைமைவகித்தனர். மற்றஅங்கத்தவர்களும் சமூகமளித்தனர். திரு. தொ. எலியாஸ்பீரிஸ் கிராமத்தின் முக்கியதேவைகளைப்பற்றி அதிபரிடம் எடுத்தோதினர். பின் சனசமூகநிலையக் காரியதரிசி திரு. F. A. பல்டானு அவர்கள் தலைவருக்கு நன்றிகூறினர். தலைவர்எழுந்து தமக்கு அளிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றிகூறியபின் நிலையம்செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி எடுத்துரைத்தார். ஈற்றில் சிற்றுண்டியருந்தியபின் திறப்புவிழாவினை நினைவூட்டுவதற்காக அதிபரையும் அங்கத்தவர்களையும்வைத்துப் புகைப்படம் பிடிக்கப்பட்டுக் கூட்டம் இனிதுமுற்றுப்பெற்றது.

F. A. பல்டானு
காரியதரிசி.

## மாதோட்டத் தபால்

( நாட்டுத்தூதன் )

ஐயா! தூதன் முதன்முதலாகத் தனது நாட்டுமக்களுக்கு ஒரு நல்ல வார்த்தை சொல்ல விரும்புகின்றான். அதாவது, கண்ணியமிக்க கமத்தொழிலைக் கடைப்பிடித்துவரும் அன்பர்களே! எமதுநாடு முன்னேற்றமடையவேண்டுமானால் எம்மிடையே திரம்பாத ஒற்றுமை நிலவவேண்டும். போலிவேடதாரிகள்சிலரின் மிரட்டலிலும், கண்சிமிட்டலிலும் எடுபட்டு ஏமாந்துபோகாதீர்கள். சுதந்திரஆட்சி சொலிக்கும்இக்காலத்திலே கோழைத்தனத்தை அகற்றிவிட்டு உண்மையான ஒற்றுமைஎன்னும் பந்தனத்தால் பிணிக்கப்பட்டு ஏகோபித்து ஒத்துழைக்க முன்வாருங்கள். "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே, ஒற்றுமைநீங்கினால் அனைவர்க்கும் தாழ்வே" என்பதை அடிக்கடி நினைவுகூர்ந்து முன்னேற்றம் பெற முன்வாருங்கள்!

**தீச்செயற்பெருக்கம்:** ஐயா! இந்நாட்களிலே எங்குபார்த்தாலும் குழப்பமும், கலகமும், கொலையுமாகவே காணப்படுகிறது. என்ன பரிதாபம்! ஓர்காலம் நிரந்தரசமாதானம் நிலவிவந்த எம்நாட்டில் குரூரச்சம்பவங்கள் நிகழ்வதைக் கேள்விப்படும் எவர்தான் கவலைகொள்ளாதிருப்பர்? சமீபத்திலே பேசாலை, முருங்கன், நெடுங்கண்டல் ஆதிய இடங்களில் நடைபெற்ற கோர சம்பவங்களே இதனை வற்புறுத்தப் போதியசான்றுகளாகும். இவற்றைக் களையும்பொருட்டு அரசினர் பொலிஸ் ஸ்ரேஷனை அமைத்தனர்தான். பொலிசருக்கு அவசரகார் உதவினர்தான். ஆயினும் பலன் பூச்சியமாகவேயிருக்கிறது. இக்குரூரங்கள் ஒழியவேண்டுமானால் நாட்டின் மத்தியஇடங்களிலே இன்னுஞ்சில பொலிஸ்ஸ்ரேஷன்களை அமைப்பதுடன் பூரண மதுவிலக்கையும் கூடியவிரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்றே தூதன் ஆலோசனைகூறுகின்றான்.

**நான்யார் தெரியுமா?:** அன்றொருநாள் பரமஏழைகளான உழவர்கள் பலரின் மத்தியில்நின்றுகொண்டு ஓர் நடுவயதான ஆடவர் தனது வீசையை முறுக்கியபடி வெறித்தபார்வையுடன் மக்களைவிழித்து, நான் இப்பகுதியிலுள்ள பெரியபோர்வழிகள்சிலருக்குப் பால்பழவகைகள் கொடுத்துவருவதோடு எனது வண்டிமாடுகளையும் விட்டுக்கொடுத்து அவர்கள் வேண்டாம் வேண்டாமென்றுசொல்லுமட்டும் சந்தோஷம்செய்துவருகிறேன். அம்மட்டா! அவர்களின் அழகியகார்களில் ஏறி உல்லாசப்பிரயாணமுஞ் செய்துவருவதோடு காலத்திற்குக்காலம் மாறிவரும் பல்வேறுசமயத்தவர்களையும் பிரியப்படுத்தப் "பச்சோந்தி" மாதிரி என்சமயத்தை மாற்றி அவர்களைப் பின்செல்லுகிறேன். நியதியான ஒரு சமயம் எனக்குக் கிடையாது. அடிக்கிறகாற்றுக்கெல்லாம் அசைந்தாடி அடிபணியும் தருப்பைப்புல்போன்று என்சீவியம் கழிகின்றது. அதனால்தான் அப்போர்வழிகளால் எனக்குத் தனிமதிப்புக் கிடைக்கின்றது. நான்யார் தெரியுமா? உங்களையெல்லாம் ஆட்டிவைக்கக்கூடிய ஒருபோர்வழிஎன்பதை அறிந்துகொள்ளுங்கள் எனக் கர்ச்சனை செய்தாராம். இதைக்கேட்டுக் கொண்டுநின்ற விழுகிழமொன்று அட அப்பனே! எனப் பெருமூச்சுவிட்டு இந்தக்காலம் இவர்களுக்கும ஓர்நடப்புத்தான் என்று விளம்பிக்கொண்டு வெளிப்பட்டதாம்.

**ஆறும்வெள்ளி:** அடம்பன் விசாரணைப்பங்கிலே பரப்புக்கடந்தானிலிருக்கும் கர்த்தர்கோவிலிலே வருடந்தோறும் தபசுகாலத்தில்வரும் ஆறும் வெள்ளி பெரிதும் பக்திஅருட்சிக்குரிய விதமாகக் கொண்டாடப்படுவது வழக்கம். அதனால்இத்தலம் ஓர்சிறு யாத்திரைத்தலம்போல் காட்சியளிக்கும். மன்னார்ப்பகுதியிலுள்ள சகல சமயத்தவர்களும், சாகியத்தவர்களும் அதில் கலந்துகொள்வர். மாதோட்டப்பகுதி மாட்டுவண்டிகள்முழுவதையும் ஆறும் வெள்ளியில் அங்கே சட்டாயம் காணலாம். இம்முறை அங்கே அருட்சிக்குரிய மூன்றுதிருப்பாடுகள் காட்சிகளுடன் ஆறும்வெள்ளிப்பத்தி முடிவெய்தியது. அன்றுமட்டுமல்ல மடுப்பதியில்நடைபெறும் ஆடி, ஆவணி மகோற்சவகாலங்களிலும் இத்தலம் ஓர்சிறு யாத்திரைத்தலம்போல் சிங்கள மக்களால் காட்சியளிக்கும். எனவே அங்குள்ளகோவிலைப் பெரிதாக்க முன்வந்து எம்கட்டளைக்குரவர் நல்முயற்சி எடுத்துவருகின்றார். இதனைவாசிக்கும் அன்பர்களும் அவருடன் ஒத்துழைப்பார்களாக. சுபம்!

## மாந்தைப்பதியின் மகாவைபவம்

மருதமடுத்திருப்பதியிலே எழுந்தருளிக் காட்சிதந்து கருணைமழை பொழிந்துவரும் பரிசுத்த செபமாலை இராக்கினியின் பண்டைய புனிததலமாகிய மார்தைப்பதியிலே அமைக்கப்பெற்றுப் பூர்த்தியுற்றுமிளிரும்லூர்து செபியின் திறப்புவிழாவைபவம் 5-5-50 வெள்ளிக்கிழமைநடைபெறுமெனவும், ஓர்வேளை இத்திகதி மேற்றிராணியாண்டவரின்வசதிக்கேற்ப மாற்றப்படலாமெனவும் தெரியவருகிறது. எப்படியிருந்தாலும் இம்மகா வைபவத்தை மிகஆடம்பரமாகவும், பக்தியருட்சிக்குரிய விதமாகவும் நடத்திமுடிக்க வேண்டுமென அடம்பன் விசாரணைப் பங்குக் கத்தோலிக்கசங்கம் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது. சென்ற 23-ந்திகதிகாலை அடம்பன் கத்தோலிக்க பாடசாலையிலே வண. கட்டளைக்குரவர் தலைமையில் சங்கம்விமரிசையாக நடைபெற்றது. அதிலே இருபது கோவில்களைச்சேர்ந்த மூப்புமாரும், கட்டளைகாரரும், பிறரும் கலந்து கொண்டார்கள். அதில் பின்வரும் பிரேரணைகள் அரங்கேற்றப்பட்டன.

1. வைபவவிழாவை நிகழ்த்தவரும் மேற்றிராணியாண்டவர்அவர்களைச் சகலரும் வரவேற்கவேண்டும்.

2. அலங்காரபந்தரிட்டு, மின்சார தீபாலங்காரமும் செய்தல்வேண்டும்.

3. திருமணித்தியால ஆராதனை, பாடற்பூசைஎன்பன நடத்தப்படவேண்டும்.

4. சமுகங்கொடுக்கும் சகலருக்கும் பெருவிருந்து அளிக்கப்படவேண்டும்.

5. இதற்குரிய செலவுபணத்தை அடம்பன் விசாரணைப்பங்கைச்சேர்ந்த (விடத்தல்தீவும் உட்பட) சகலகத்தோலிக்க குடும்பங்களும் தத்தம்கோவில் மூப்புமார்மூலம் சட்டளைச்சுவாமியாருக்குக் கூடியகெதியில்சேர்த்து ஒப்படைக்கவேண்டும்.

மன்னார்ப்பகுதியிலுள்ள கத்தோலிக்க அன்பர்களே! சகலரும்ஒருங்குதிரண்டு திறப்புவிழாவைபவத்திற்குச் சமுகங்கொடுத்து இத்திருப்பதியைச் சிறக்கவைக்க முன்வருவீர்களாக!

—நிருபர்

---

## நேர்த்தியின் பூர்த்தி

மதரயேசுவின் திருஇருதயத்திடமும் பரிசுத்ததிருக்குடும்பம், அர்ச். சவேரியார், அர்ச். நீக்தம்மாள், பொம்பேய் மாதாவினிடமும் நான்கேட்டகாரியம் கிடைத்தது. நேர்த்திப்படிஇதைப்பிரசுரிக்கிறேன். இவர்கள்நாமங்கள் போற்றப்படுவதாக.

S. E.

---

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 27 1950.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org